# ஞானச்சுடர்


ஆவணி 2023

308ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்**
**போகூழால் தோன்றும் மடி.**

**பொருள் :** ஒருவனுக்குப் பொருளுண்டாவதற்குக் காரணமாகிய ஊழினால் முயற்சி உண்டாகும்; பொருள் அழிதற்குக் காரணமாகிய ஊழினால் சோம்பல் உண்டாகும். (371)

**பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்**
**ஆகலூழ் உற்றக் கடை.**

**பொருள் :** பொருள் இழத்தற்கேதுவாயுள்ள ஊழ் அறியாமையைக் கொடுக்கும்; செல்வம் பெருகுதற்கு ஏதுவாயுள்ள ஊழ் விரிந்த அறிவைக் கொடுக்கும். (372)

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**நிகரில்லாத இன்பம்**
**நிறையுமே**



பத்மா சனத்தில் பரிவுட னிருந்து
சித்த விருத்தியைத் தீர்த்திடு வோமே 21

மணிவா சகந்தரு மந்திர மோதினால்
பிணிமூப் பில்லாப் பிரம மாகுதும் 22

யவனர் சோனகர் தமிழர்சிங் களவர்
எவரும் வணங்குவார் எந்தைதன் தாளே 23

அரவார் செஞ்சடை அண்ணல்தன் பாதம்
விரவி நிற்பவர் வீடுபெற் றனரே 24

இலது உளதென வெவருமே மாறக்
கலந்து நிற்பவன் கண்ணுத லாமே 25

வஞ்ச நெஞ்சினர் காணா வள்ளலை
அஞ்செழுத் தோதி அர்ச்சிப் போமே 26

அழகா ரரியும் அம்புயா சனனும்
தொழுதிட நின்றவன் சுத்த சிவமே 27

இளமை மூப்பிலா னெம்பி ரானெனத்
தொழுதிட நின்றவன் சோதிசொ ரூபனே 28

இறப்பும் பிறப்பும் மெமக்கில்லை யென்றவன்
அறமார் நல்லூ ராசா னாமே 29

அனங்க னாகத்தை யன்றெரி செய்தவன்
கணங்கொள் பேயோ டாடிய கள்வனே 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 308



2023 ஆவணி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஏதிலார் குற்றம்போல்... | கு. சிவபாலராஜா | 01 - 05 |
| ஆனந்த சாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 06 - 08 |
| திருப்புகழ் | முருகவே பரமநாதன் | 09 - 11 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 12 - 13 |
| உணவுநலம் | கு. சோமசுந்தரம் | 14 - 18 |
| கலியுகத்திற்கு உய்வை... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 19 - 20 |
| எல்லா மூர்த்தங்களையும்... | க.கு.க. சிவபாலன் | 21 - 24 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 25 - 28 |
| நால்வர் குருபூஜையால்... | கே.எஸ். சிவஞானராஜா | 29 - 30 |
| வைணவமும் சைவமும் | இராம ஜெயபாலன் | 31 - 32 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 33 - 36 |
| பிரபுடதேவ மகாராஜா... | செல்வி வல்லிபுரம் | 37 - 39 |
| தமிழ்ப் பெண் கவியரசிகள் | இரா. செல்வவடிவேல் | 40 - 43 |
| என் செல்வச்சந்நிதியின்... | ஜெ. மதுமதி | - 44 |


**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3466

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் ஆடி மாத வெளியீடு

## வெளியீட்டுரை:

ஞானச்சுடர் 307ஆவது ஆடி மாத மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆசிரியை திருமதி உமாராணி பேரானந்தம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் ஆரம்ப உரையில் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனது பேரருள் ஆலயத்திற்கு வரும் அடியவர்கள்மூலம் காணலாம். அடுத்ததாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நித்திய அன்னப்பணியினூடாக ஈர்க்கப்பட்டுக் கொண்டிருக்கும் அடியவர்கள் மூலம் காணக்கூடியதாக இருக்கின்றது. அவ் அடியவர்களின் ஆதரவினால் ஆச்சிரமம் ஆற்றும் சகல சமய சமூகப் பணிகளையும் காணும்பொழுது பிரம்மிப்பாக இருக்கின்றது. ஒரு சாதாரண அன்னமிடும் பணியைச் செய்யும் ஆச்சிரமத்தில் இவ்வகையான செயற்பாடுகள் நடைபெறுவதற்கு சந்நிதி வேலவனது பேரருள் முதன்மையாக விளங்குகின்றது.

இதன் தொடர்ச்சியாக மாதாந்தம் வெளிவரும் ஞானச்சுடர் மலரின் வளர்ச்சி தடையேதுமமின்றி வெளிவருவதும் முருகன் அருளே. இம் மலருக்கு தொடராக ஆக்கங்கள் வழங்குவோருக்கும், வாசகர்களுக்கும் சந்நிதி வேலவனது அருள் கிடைக்க வேண்டுமென்று வாழ்த்தி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

ஆடி மாத ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை அகில இலங்கை சமாதான நீதிவானும், இளைப்பாறிய அதிபரும், பேரவை உறுப்பினருமாகிய திரு ஆறுமுகம் சிவநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

முன்னூற்று ஏழு மாத காலமாக ஒரு ஆன்மீக மலர் வெளிவருவது என்பது ஒரு சாதாரண விடயம் அல்ல. எமது பாடசாலை நாட்களில் ஒரு மலரை வெளியிடுவதற்கு எவ்வளவோ பிரயாசை எடுத்துத்தான் மலரை வெளியிடுவோம். ஆனால் இங்கே அப்படியல்ல. மாதாந்தம் ஒரு மலர். இது முருகனின் அருள் என்றே கூறவேண்டும். சந்நிதியான் ஆச்சிர மத்திலிருந்து இம் மலர் வெளிவரும் காரணத்தால் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை என்ற விடயம் தேவையில்லை. சம்பிரதாயம் கருதி இந்நிகழ்வு நடாத்த வேண்டியுள்ளது. அத்துடன் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை ஆற்ற வரும் அன்பர்களது மன எழுச்சியையும் கேட்கக்கூடியதாக உள்ளது என்று கூறி பேரவை உறுப்பினராக இருக்கும் காரணத்தால் இவ்விடயங்களை சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கி ஆடி மாத மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தன்மைபற்றி கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

ஒவ்வொரு மனிதனும் தான் இவ்வுலகில் வாழும் காலத்திலேயே பல்வேறு பட்டங்களையும், கௌரவங்களையும் தான் வாழும் சமூகம் அவனுக்கு வழங்கும்போது முழுமையடைகிறான் என்பதில் எவ்வித சந்தேகங்களுமில்லை. நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாம்... என்ற முதுமொழிக்கமைவாக சமூகத்தில் நன்மை செய்யக்கூடிய மனப்பான்மையுடன் ஒருவர் இருப்பாரேயானால் அச் சமூகத்திலுள்ள நல்லவர்கள் மேம்படுவதோடு அவரைச் சார்ந்தவர்களும் ஏதோவொரு வகையில் மேம்பாடடைவார்கள் என்பது திண்ணம்.

இவ்வாறான அறிஞர்களை, நல்லவர்களை எமது சமூகம் பல்வேறு தரத்திலும் கௌரவிக்கவேண்டும் என்ற சிந்தனைகளை அறவே மறந்து விடுகின்றது. ஆகவே, தற்போது வாழ்ந்துகொண்டிருக்கும் சமுதாயம் இவ்வகையான நல்ல செயற்பாடுகளுக்கு இளைய சந்ததிக்கு தோள் தட்டிக் கொடுத்து அறிவுரைகள் புகட்ட வேண்டிய கட்டாயம் இன்றைய சமுதாயத்தின் தேவையாகவுள்ளது. இவ்வாறான அசமந்த போக்குகள் காணப்பட்டாலும் சிற்சில இடங்களில் தமது சமுதாயத்தின் கடமைகளை முற்போக்கான சிந்தனைகளை உடையவர்கள் மறக்கவில்லை என்பதையும் காணமுடிகின்றது.

ஒவ்வொரு சமயமும் நல்ல கோட்பாடுகளைப் போதிக்கின்றது. உலகத்து மக்கள் ஒழுக்கத்துடனும் நற்பண்புகளுடனும் வாழ சமயங்கள் வழிகாட்டுகின்றன. இன்றைய உலகில் சமயப் பற்றுள்ள மனிதர் மிகச் சிலரே. அதுவும் இந்து சமயத்தைப் பொறுத்தவரை அதன் நிலை என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். பழம் பெருமையை மட்டும் பேசிக் காலம் கழிக்கலாகாது. இன்றைக்கே நாம் செய்ய வேண்டுவனவற்றை, செய்தல் வேண்டும். நமது சமயக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் முழுமனதுடன் கடைப்பிடித்தல் வேண்டும் என்பதை உணரவேண்டும். எமது சமயத்தின் வளர்ச்சியையும் நிலையான தன்மையையும் உறுதி செய்ய, வேண்டுவனவற்றைச் செய்தல் வேண்டும். காலத்துக்குக் காலம் மகான்கள் பிறக்கிறார்கள். அருளாளர்கள் அவதாரம் செய்கிறார்கள். அவர்கள் சொல்லிச் சென்றவற்றை நாம் கடைப்பிடிக்கிறோமா என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். அத்திவாரம் நன்றாக இல்லாத கட்டடம் போலாகாமல் உறுதியான மனத்துடன் சமயத் தொண்டு புரிதல் வேண்டும். இவை யாவும் இன்றைய இளைஞரின் தலையாய கடனாகும். இது தமது கடமையும் உரிமையும் என்ற உணர்வோடு இன்றைய இளைஞர் செயலில் இறங்க வேண்டும். எங்கள் சமயத்தின் எதிர்காலமும் அவர்கள் கையிலேதான் உள்ளது.

சமய வழிபாட்டு இடங்களில் ஒழுங்கீனங்களை ஏற்படுத்துவது, வேண்டாத விடயங்கள் பற்றிப் பேசுவது, அரட்டையடிப்பது போன்றன எமது சமய நடைமுறைகளுக்கு ஒவ்வாதவை ஆகும். இச்செய்கைகள் உண்மையான தெய்வ ஈடுபாடுள்ளோரையும் திசை திருப்பும் செயலாகும். இதனால் எமது சமய அடிப்படைகளே விளக்கம் பெறாமல் போய் விடுகிறது. இது குறித்து இன்றைய இளைஞர்கள் சிந்திப்பதில்லை. இவையெல்லாவற்றையும் எதிர்காலச் சந்ததியினராகிய நாம் சிந்தித்து தெளிந்து தவிர்த்துவிட வேண்டியவை. நாம் சிறுகச் சிறுகச் செய்யும் சமயத்துக்கு ஒவ்வாத விடயங்கள் நமது சமயக் கோட்பாடுகளை, விழுமியங்களை அரிக்கும் கறையான்கள் போன்றவை இவையே என்பதை உணர்ந்து சமயக் கோட்பாடுகளைப் போற்றிப் பாதுகாப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நினைவில்...

சங்கீத பூஷணம் உயர்திரு செல்லத்துரை குமாரசாமி அவர்கள் இறைவன் திருவடி நிழலை அடைந்ததையிட்டு மனத் துயரடைகின்றோம்.

அமரர் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையை அமைப்பதற்கு முன்னின்று செயலாற்றியதுடன் அப் பேரவையின் நிர்வாகசபை உறுப்பினராகவும் இருந்து ஆச்சிரமம், பேரவையின் வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை வழங்கிய பெருந்தகையாளர் ஆவார்.

அவரது இசையாற்றலின் மகத்துவத்தை அறிந்து எமது பேரவையினால் ஞானபண்டித இசையரசு என்னும் விருதினை வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் ஆச்சிரமத்தில் இடம்பெறும் வாராந்த வெள்ளி நிகழ்வுகளையும் திறம்பட நடைபெறுவதற்கு வழிவகுத்த ஒரு அன்பராவார்.

அன்னாரின் மறைவானது சங்கீத உலகுக்கே ஓர் பேரிழப்பாகவே கருத வேண்டியள்ளது. தாம் வாழ்ந்த காலத்தில் பலவித எழுச்சிப் பாடல்களைப் பாடி புதிய உத்வேகம் அளித்த அன்னாரை என்றும் நாம் நினைவு கூர்வோமாக.

-பேரவையினர்-

# நீங்கா நினைவில்...

அண்மையில் எம்மைவிட்டுப் பிரிந்த செல்வம்ஸ் பற்றி உரிமையாளர் அமரர் சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்கள் 17.08.2023 இறைவனடி அடைந்த செய்தியினையிட்டு நாம் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளோம்.

அமரர் அவர்கள் தான் வாழ்ந்த காலத்தில் சமூகத்திற்கு உகந்த பண்பாளன் ஆகவும் பரோபகாரியாகவும் வாழ்ந்து சமூகத்தை மேம்பாடடையச் செய்த ஓர் அன்பராவார்.

ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சகல சமய சமூகப் பணிகளுக்கும் தன்னாலான ஆதரவை வழங்கியதோடு தனது சந்ததியையும் ஆச்சிரமத்தோடு இணைத்த ஒரு பெருமகன் ஆவார்.

அன்னாரின் ஆத்மா சந்நிதி வேலவனின் பாதாரவிந்தங்களில் சரணபுகுந்து நன்னிலை அடைய வேலவனை பிரார்த்திக்கின்றோம்.

-சந்நிதியான் ஆச்சிரமம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**A. ஆனந்தகுமார்**

(லண்டன்)

**உரிமையாளர்**

(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr திருமதி பத்மராணி குகானந்தன்**

(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

**S. உமாகாந்தன்**

(கொழும்பு)

**சி. சிவமூர்த்தி**

(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**அ. சிவகுமார்**

(யாழ்ப்பாணம்)

**A. நாகரெத்தினம்**

(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

**இ. குமாரசாமி J.P.**

(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

**பொ. குமாரசாமி**

(சட்டத்தரணி, நவிண்டில்)

**திருமதி கௌரி சுரேசன்**

(ஆசிரியர், ஆவரங்கால்)

**கு. நிரோசன்**

(தொண்டைமானாறு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நா. சிவசிதம்பரம்**

(கோணாவளைலேன், கொக்குவில்)

**இராசையா தங்கவேல்**

(அச்சுவேலி)

**S. அருளையா**

(கொழும்பு)

**ச. பத்மநாதன்**

(தெற்குத் தோப்பு, புத்தூர்)

**க. தெய்வேந்திரம்**

(பண்டத்தரிப்பு)

**தே. தேவராஜேந்திரன்**

(திகிரி லேன், தும்பளை)

**திருமதி சி. செல்வநாயகி**

(கரவெட்டி)

**முத்து கணேஷ்**

(மஞ்சத்தடி, இணுவில்)

**K. கஜமுகன்**

(இராசவீதி, நீர்வேலி)

**செ. சிவலிங்கம்**

(மலர் வசந்தம், இணுவில்)

**N. ஜெயரட்ணராசா**

(பண்ணாகம், சுழிபுரம்)

**சி.து. கலைச்செல்வம்**

(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

**தலைவர்**

(வாழ்வகம், சுண்ணாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வை.ச. பரஞ்சோதி**

(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

**செ. வைகுந்தவாசன்**

(உடுப்பிட்டி)

**சீ.சி. கந்தையா (பலாலி)**

(ஆவரங்கால்)

**சி. முருகதாஸ்**

(சிறுப்பிட்டி தெற்கு)

**V.S. ஸ்ரீஸ்கந்தசாமி**

(தாளையடி)

**S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்**

(மானிப்பாய் தெற்கு)

**இ. தயாபரன்**

(கோண்டாவில்)

**திருமதி தம்பிராஜா**

(திருநெல்வேலி)

**செ. தர்மலிங்கம்**

(சாவகச்சேரி)

**திருமதி தி. பரமேஸ்வரி**

(ஆனைக்கோட்டை)

**S. பொன்னம்பலம்**

(சுண்ணாகம்)

**ப. திருக்குமரன்**

(அமுதசுரபி, கட்டுடை)

**சி. நவரெத்தினம்**

(ஆனந்தா வீதி, மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. சுப்பிரமணியம்**

(சமரபாகு, உடுப்பிட்டி)

**சிறீ மாதவன்**

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**ரஞ்சினி ஸ்ரீஸ்கந்தராசா**

(யாழ்ப்பாணம்)

**ச. திவாகரன்**

(உரும்பராய் மேற்கு)

**க. சச்சிதானந்தன்**

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

**நா. மகேந்திரராசா**

(பிறேம மகால், வல்வெட்டி)

**சு. சிவராசா**

(கொக்குவில்)

**நல்லதம்பி குமரவேள்**

(இணுவில்)

**கா. அருளானந்தன்**

(அராலிவீதி, சங்கானை)

**பத்மநாதன் குணசுந்தரி**

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)

**ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்**

(ஆதவன் அரிசி ஆலை, அச்சுவேலி)

**ச. மார்க்கண்டு**

(ஊரெழு மேற்கு)

**திருமதி கமலஹாசன் மஞ்சுளா**

(வல்வெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏதிலார் குற்றம்போல் தன் குற்றம் காணுதல்

**– திரு கு. சிவபாலராஜா** அவர்கள் –

யாரிடத்தும் வேறுபாடு கருதாது ஒப்ப நிற்கும் தன்மை நடுவு நிலைமையாகும். "ஏதிலார் குற்றம்போல் தன் குற்றம் காணுதல்" என்பது நடுவு நிலைமைக்குரிய அடிப்படை இலக்கணமாகும். பகை, நொதுமல், நட்பு என்னும் மூன்று பகுதியிலும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை நடுவு நிலைமை எனப்படும். "நொதுமல்" என்பது அயலவரைக் குறிக்கும். இது நன்றி செய்தார் மாட்டு அந்நன்றியினை நினைத்தவிடத்துச் சிறிதளவேனும் நடுவு நிலைமை சிதைந்துவிடக் கூடுமன்றோ? எனவே அவ்விடத்தும் சிதைவடையக் கூடாது என்பது நியதியாகும். செய்நன்றி மறத்தல் அறம் அல்லாத செயலாகினும், தக்க தருணம் வரும்போதும், செய்த நன்றிக்காகவேனும் நடுவு நிலைமை குன்றாது ஒழுகுதலே அறமாகும். அறங்கள் பலவாயினும் நடுவு நிலைமை என்னும் அறம் மேன்மைமிக்க அறமாகும். அவ்வாறு மேன்மை மிக்க அறமாக அது விளங்கவேண்டின் பகை இருக்குமிடத்தில், அந்தப் பகை காரணமாக நடுவு நிலைமையை மீறிய செயல் எதனையும் செய்யக்கூடாது. அதுபோல் நொதுமல் நிலை இருக்கும்போதும் நடுவு நிலைமை மீறுதல் கூடாது. அவைபோல் நட்பு இருக்குமிடத்தில் அந் நட்பு காரணமாக நடுவு நிலைமை மீறிய செயல் எதனையும் செய்தல் கூடாது. இவை யாவும் நடுவு நிலைமையின் சிறப்பினை எடுத்துக் காட்டுவனவாம்.

தகுதி யெனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட் டொழுகப் பெறின்.

-குறள் 111.

நடுவு நிலைமை என்பது மக்களின் இல்லற வாழ்விற்கும், துறவறத்திற்கும் வேண்டப்படுவதொன்றே. ஒருவர் இறந்தபின் அவர் விட்டுச்சென்ற எச்சமான பகுதிகளை அல்லது பொருட்களை அல்லது அவரது சுக்கில சுரோநிதக் கலப்பினால் உருவாகி வந்த அவரது பிள்ளைகளின் நடுவு நிலைமைப் பண்புகளைக் கருத்திற்கொண்டு இறந்தவரது தகுதிகளை நாம் அறிந்துகொள்ள முடியும். உதாரணமாக ஒருவர் எழுதிய நூல்களிலுள்ள கருத்துக்களைப் படிப்போமானால், நூலாசிரியர் இல்லாத போதிலும் அவர் எவ்விதம் உலகில் வாழ்ந்திருப்பார், என்ன கொள்கைகளைப் பின்பற்றியிருப்பார், எவ்வாறான திட்டங்களை வகுத்திருப்பார், எவ்வாறான வழிகளை மக்களுக்குக் காட்டியிருப்பார் ஆகிய எச்ச நினைவுகளை நாம் நினைத்துப் பார்த்து அவரின் நடுவு நிலைமை நோக்கி அவர்மீது பெருமை கொள்வோம். அதுமட்டுமல்ல அவரது தோற்றம் இப்படித்தான் இருந்திருக்கும் என எம் மனத்தில் எண்ணி அவரை நேரில் காணாவிட்டாலும், அவருக்குரியதொரு தோற்றப்பொலிவினை நாம் உருவாக்கி விடுவோம். இவை யாவும் நடுவு நிலைமையை ஆதாரமாகக் கொண்டே கணிப்பிடப்படும். ஒருவரின் நடுவு நிலைமை ஒழுக்கமானது அவரது பெற்றோரை நினைவூட்டும்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்.

-குறள்.

*அதிகமாகப் பெறுவதற்கு கண்டிப்பாக நாம் அதிகமாகக் கொடுக்கவேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமும் இன்பமும் கலந்து வருதலே ஒருவரின் வாழ்வில் காணத்தகும் உண்மை யாகும். தனக்கு வரும் இன்ப துன்பங்கள் மற்றும் செல்வம், வறுமை நிலைகளை எண்ணி தன் நெஞ்சில் நடுவு நிலைமை மீறியமைந்த செயல்கள் எதனையும் மற்றவர்க்குச் செய்தல் கூடாது. கேடு வருதலும் செல்வம் வருதலும் முன்னைய வினையால் வருபவை. அதை எண்ணி மனம் கோணக்கூடாது. அவ்வாறு நடுநிலையாக இருத்தலே சான்றோராகிய கற்றோர்க்கு அணிகலன் போல்வதாகும்.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

-குறள்.

முன்னே தான் சமனாக இருந்து பின்னர் தன்மீது வைக்கப்பட்ட பாரத்தை வரையறுத்துக் காட்டுதலே ஒரு துலாக்கோல் ஆகிய தராசின் வேலையாகும். அதுபோல் சான்றோர்கள் முதலில் தாம் சமனாக இருந்து அல்லது நின்று பின்னர் ஏனையோருக்கும் தமது நடுவு நிலைமையை வகுத்து வழங்குதல் வேண்டும். அவர்கள் ஒருபாற் கோடாமை அவர்களுக்கு அழகு ஆகின்றது. பகை, அயலவர், நட்பு என்னும் மூன்று திறத்தார்க்கும் ஒப்பக் கூறுதல் சான்றோரின் கடமையாகும். உள்ளவற்றை மறைத்தல் கூடாது. சான்றோர் சீர்தூக்கிப் பார்த்தல் எங்ஙனம் எனின் தொடை விடைகளால் கேட்டவற்றை ஊழால் உள்ளவாறு உணர்வதாகக் கொள்ளல் வேண்டும். இவ்விடத்தில் சான்றோர்கள் தம் அறிவைப் பயன்படுத்துதல் வேண்டும்.

சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

-குறள்.

திருமூலர் அருளிய திருமந்திரப் பாசுரங்கள் நடுவு நிலைமை என்பதற்குப் பின்வரும் கருத்தினைத் தெரிவிக்கின்றது. நடுவு நிலைமை என்பதற்கு "சிரசின் மேல் விளங்கும் ஒளியில் சீவன் நிற்றல்" என்னும் கருத்தினைக் கூறியுள்ளது. சுழுமுனை நாடி என்பதற்கு நடு நாடி என்றும் கூறப்பட்டுள்ளமை காணலாம். எனவே நடு நாடியில் சீவன் (பிராணன்) நிற்றலை நடுவு நிலைமை என்று அருளியுள்ளார் திருமூலர். இவ்வாறு நடுநாடியில் பிராணன் நிற்றல் ஓர் நடுநிலையான யோக சாதனையாகக் கூறப்பட்டுள்ளது. நடுநாடியில் பிராணன் நிற்பதால் அதுவே சிவனையடையும் உண்மை மார்க்கம் என்பது அதன் கருத்தாகும். சூரிய சந்திரர்களாகிய இரு கண்களுக்கும் மேல் புருவ நடுவில் பிராணன் நிற்றல் நடுவு நிலைமை என்பதும் திருமந்திரத்தில் கூறப்பட்டவையாகும். சிவனுக்கும் சக்திக்கும் இடையே குண்டலினி சக்தியானது, பிராணவாயு என்னும் வாகனத்தில் ஏறி பிராணனோடு சேர்ந்து சிரசினையடைந்து சகஸ்ரதளத்தையடைதல் திருமந்திரத்தில் நடுவு நிலைமையாகக் கூறப்பட்டுள்ளது.

நடுவுநின் றார்க்கன்றி ஞானமுமில்லை
நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே. -திருமந்திரம்.

*நாக்கில் பலம் இருப்பவன் ஆவேசப்பட்டால் கலகம் பிறக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சகஸ்ரதள அறிவில் நிற்போர் ஞானமுடையவர்கள் ஆவர். அவர்களுக்கு நரகமும் இல்லை, நடுவு நின்றார் தேவவடிவு பெறுவர்.

நடுவு நின்றார் சிவபெருமான் போலத் திகழ்வர் என்று கூறியுள்ளது திருமந்திரம். காக்கும் இயல்புடைய திருமால் அவரிவர் எனப் பேதம் பாராட்டாது நடுவு நிலையில் நின்றே தனது தொழிலாகிய காத்தலைச் செய்கின்றார். நான்முகனாகிய பிரமனும் தனது படைக்கும் இயல்பால் நடுவு நின்றே தொழில் புரிகின்றார். பல சிவஞானியர்களும் நடுவு நிற்கின்றனர். எனவே இவர்களும், இவர்களைப்போல உள்ள நடுவு நிற்பார் பலரும் சிவபெருமானாகித் திகழ்வர். திருமூலரும் நடுவு நிற்போரைத் தன் இனத்தினர் எனக் கூறியுள்ளார். இதனால் நடுவு நிற்றலின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

நடுவுநின் றான்நல்ல கார்முகில் வண்ணன்
நடுவுநின் றான்நல்ல நான்மறை ஓதி,
நடுவுநின் றார்சிலர் ஞானிகள் ஆவோர்
நடுவுநின் றான்நல்ல நம்பனும் ஆமே.

-திருமந்திரம்.

அடுத்து நடுவு நின்றார் பெறும் பயன்கள் கூறப்பட்டுள்ளன. இறைவனாகிய சிவபெருமானே எல்லாக் காரியங்களையும் செய்பவர். அவரே யாவற்றையும் அழிப்பவர். அதனால் சிவபெருமானின் திருவடியை ஏற்றுக்கொண்டு நிற்பவர் நடுவு நிற்போராவர். அவர்கள் இறைவன் திருவடிகளைப்பற்றி நிற்போராவர். அவ்விறைவனைத் துதிப்போரும் நடுவு நிற்போராவார். அதனால் நடுவு நிற்போர் சிவபெருமானின் கருணையைப் பெறுவர். இவை நடுவு நிற்போருக்குக் கிடைத்த பேறு ஆகும். திருமந்திரநூல் ஓர் சாத்திரமும், தோத்திரமும், தத்துவக் கருத்துக்களும் அடங்கிய யோக நூலாகும். அதன் கருத்துப்படியே மேற்கூறிய விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் திருமந்திரம் வருமாறு.

தோன்றிய எல்லாம் துடைப்பன் அவனன்றி
ஏன்றுநின் றாரென்று மீச னிணையடி
மூன்றுநின் றார்முதல் வன்திரு நாமத்தை
நான்றுநின் றார்நடு வாகிநின் றாரே.

-திருமந்திரம்.

நடுவு நிற்பார் யோக சாதனையால் சிவனை அடைய முடியும். அறம் போற்றும் வாழ்வியல் நூலாகிய திருக்குறள் கூறியுள்ள கருத்துப்படி நடுவு நிலைமை என்பது வாழ்வியலோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளது.

தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

-குறள்.

தனது உடலைப் பெருக்கமடையச் செய்தற்கு தான் பிறிதோர் உயிரின் உடம்பைத் தின்பவன் எங்ஙனம் அருளை ஆள முடியும். முடியாது என்பது குறிப்பெச்சம். பயனில்லாத ஊன் பெருக்கம் இங்கு கூறப்பட்டுள்ளது. ஆனால், அதைப் பயன் எனக் கருதுகின்றான். ஓர் இகழ்ச்சிக் குறிப்பும் இக்குறளில் தோன்றுகின்றது. இக் குறள் "புலால் மறுத்தல்" அதிகாரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறதாயினும் இக் குறளின் கருத்தானது ஓர் நடுவு நிலைமைக் கருத்தினைக் கொண்டிருத்தலை நோக்கலாம்.

இன்னொரு நடுவுநிலைமைக் கருத்து விளங்கும் குறள் ஒன்றினைக் காணலாம். அக் குறளும் "இன்னா செய்யாமை" என்னும் அதிகாரத்தில் காணப்படுகிறது. ஆயினும் நடுவு நிலைமைக் கருத்தினைக் கொண்டுள்ளது.

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்.

-குறள்.

எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல் பற்றி "இன்னா செய்யாமை" என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் விளக்கியுள்ளார். தனக்கு யாரும் துன்பம் செய்தால் அதனால் தனக்கு நேரும் இடர்களைத் தானே நன்கு அனுபவித்துள்ள நிலையில் அதே துன்பத்தைப் பிறர்க்குச் செய்வது எங்ஙனம் என வினா எழுப்பியுள்ளார் வள்ளுவர். அதற்கு விடையாக ஒருவித மயக்கம் காரணமாகவே தன்னை மறந்து பிறர்க்குத் துன்பம் செய்ய நேரிடுகின்றது.

"ஒருவரின் தகுதியை அவரது மக்களால் அறிக" என்பது நல்ல பொருளுடைய வசனங்களாகும்.

மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
எந் நோற்றான் கொல் எனும் சொல்.

-குறள்.

எனவே, ஒருவரின் நடுவுநிலைமைக்கு எச்சங்களாக அவர் பிள்ளைகளைப் போற்றலாம். நடுவு நிலையாகிய செப்பம் மன நிகழ்ச்சியாதலின் அதனை அறிய வேண்டும் எனில் காட்சிப் பிரமாணமாக அவர் பிள்ளைகள் விளங்குவர். தந்தையே மகனாகப் பிறக்கின்றார். "தந்தை அறிவு மகன் அறிவு" என்பது நாலடியார் கூறுவது.

ஒருவன் நடுவுநிலையில் நிற்பது அரிது. ஈகை, இரக்கம், அன்பு, இன்சொல் முதலிய எல்லாவித நலன்களும் நடுவுநிலைமை என்ற ஒன்றினால் சிறப்புப் பெறுகின்றது. அதாவது; ஈகை செய்யும்போது அவரிவர் என்னும் பேதங்கள் விலக்கப்படுதல் வேண்டும். அது ஓர் நடுநிலையாகும். நடுநிலையால் ஈகை சிறப்படைகிறது. அதுபோல் இரக்கம் காட்டும்போது நடுநிலை பின்பற்றப்படுதல் வேண்டும். அன்பு காட்டும்போதும் நடுநிலை பின்பற்றப்படுதல் வேண்டும். இன்சொல் பேசுதலும் எல்லோருடனும் பேசுதல் எனில் அது சிறப்படையும். ஓர் திருமந்திர வரிகளை நோக்குவோம்.

யார்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்
பார்த்து இருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே.

-திருமந்திரம்.

நடுநிலைமை இல்லாது செயலாற்றுதல் என்ன காரணம் பற்றியது எனில், செல்வத்தால் வரும் உயர்வும், செல்வம் இன்மையால் வரும் தாழ்வும் கருதி மக்கள் நடுவு நிலைமையை மீறி நடக்கின்றார்கள். அவை வினையின் பயனாய் வருவனவாம். தாமாக வருவனவல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதி என்பது நிலைத்தது. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பது புறநானூறு. அவற்றை வினைவயத்தால் நாமே தேடிக்கொள்வது. எனவே செல்வம், வறுமை கருதி நடுவுநிலைமை தவறுதல் கூடாது.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

-குறள்.

தன்மனம் நடுவுநிலைமையை விடுத்துத் தீயனவற்றைச் செய்ய நினைக்குமாயின், அந்நேரத்திலேயே நான் விரைவில் கெடுவேன் என ஒருவன் அறிவானாக. பாண்டியன் நெடுஞ்செழியன் பொற்கொல்லன் சொற்கேட்டு கோவலருக்கு அநீதி இழைத்த சிலப்பதிகாரம் நாமறிவோம். அதனால் மதுரை மாநகரம் எரிந்தது.

கெடுவல்யான் என்பது அறிக; தன் நெஞ்சம்
நடு வொரீஇ அல்ல செயின்.

-குறள்.

"உன்னைப்போல் பிறரையும் நேசி" என்பது மகா வாக்கியமாகும். இது உணர்த்துவது நடுவுநிலைமைக் கருத்தினையே.

பிறிதோர் உயிருக்கு வந்த துன்பத்தைத் தமக்கு வந்த துன்பமாகவே கருதுதல் வேண்டும். உடனேயே அத் துன்பத்தை நீக்குதல் வேண்டும். அவ்வாறு நீக்காவிடில், நாம் அறிவுபெற்றதால் ஆகிய பயன் யாதும் உண்டோ என்பது வள்ளுவரின் குறள் வினாவாகும். இல்லை என்பது மறுமொழியாகும்.

அறிவினான் ஆகுவது உண்டோ? பிறிதின் நோய்
தம் நோய் போல் போற்றாக் கடை.

-குறள்.

நடுவுநிலைமை வகித்துச் செயலாற்றுவதில் உள்ள கடினங்கள் நீங்க வேண்டும். அதற்காக ஊழ்வினையை நடுநிலை மத்தியாகக் கொள்ளுதல் வேண்டும். ஒரு சம்பவம் நடைபெற்றுவிட்டால் அது ஊழ்வினையால் நடந்தது என்பது நடுநிலையாகும். அதை மீறி நாம் ஒரு பக்கம் சாய்வது நடுநிலையாகாது. நீதி வழங்குதலுக்கும் நடுநிலை வகிப்பதற்கும் இடையே சிறு மாறுபாடுகள் காணப்படும். நீதிக்கு அப்பால் உள்ளது நடுநிலையாகும். மனிதர் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு பக்கம் சார்ந்துதான் இருப்பார்கள். இதைத்தான் "முற்சாய்வு" எனக் குறித்துள்ளனர். இச் சாய்வு நேர்நிலையாகும்போது அது ஊழ் அல்லது விதி என்பதில் போய் முடியும். இருவினைப் பயன் சென்றடைய ஏதுவாகிய வழிதான் ஊழ் ஆகும். நியதி, ஊழ், பால், முறை, உண்மை, நதி, வினை, தெய்வம், விதி என்பன ஒத்த கருத்துடைய சொற்களாம். அதாவது ஒரு பொருட்கிளவி.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

-குறள்.

கோடி பொருள் தேடினும் இறைவன் வகுத்த வழியேதான் அவற்றை நாம் அநுபவிக்க நேரும் என்னும் உண்மை உணர்த்தப்பட்டுள்ளது.

*ஒவ்வொரு வினைக்கும் அதற்குச் சமமான எதிர்வினை உண்டு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த சாகரம்

– *திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்* அவர்கள் –

## திருக்கார்த்திகை தீபம்

அடிமுடியில்லாத பரஞ்சோதியாக நின்ற சிவ பரம்பொருள் நெருப்புக் கம்பத்திலிருந்து பரமசிவனாக வெளிப்பட்டு பிரம்மா, விஷ்ணுவுக்குக் காட்சி கொடுத்தபின் நெருப்புக் கம்பமானது மலையாக அமைந்தது. இதுவே அண்ணாமலை. பரமசிவம் அடிமுடியில்லாத நெருப்புக்கம்பமாக நின்று அனைத்து உலகங்களையும் ஒளிவெள்ளமாக்கிய நாள் கார்த்திகை தீபம். நெருப்புக் கம்பத்திலிருந்து லிங்கோற்பவர் பிரம்மா, விஷ்ணுவுக்கு காட்சிகொடுத்த நாளே சிவராத்திரி. சிவராத்திரியன்று வில்வமரத்தில் தாவிப் பாய்ந்து குரங்கொன்று விளையாடியது. அப்போது வில்வ இலைகள் மரத்தின் கீழே இருந்த லிங்கப் பரம்பொருளின்மேல் விழுந்தன. சிவலிங்கத்தை வழிபட்டதன் பயனாக அக்குரங்கினை எம்பெருமான் முசுகுந்தச் சக்கரவர்த்தியாகப் பிறக்க அருள்புரிந்தார்.

அணையும் நிலையில் இருந்த திருவிளக்கின் திரியை உண்ண எலி அதன்மீது மூக்கை வைத்தது. அதனால் திரியானது தூண்டப்பெற்றுப் பிரகாசமாக ஒளிவிட்டு எரிந்தது. மகா சிவராத்திரியன்று திருவிளக்கேற்றியதன் பலனாக ஈசன் எலியை மகாபலிச் சக்கரவர்த்தி யாகப் பிறந்து அரசாள வைத்தார்.

முருகப்பெருமானுடைய விரதம் திருக்கார்த்திகை விரதம். கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் மாலை ஐந்து மணிக்கு மேல் கார்த்திகை நட்சத்திரம் இருக்கும் நாள் விரதநாளாகும். முருகப்பெருமான் திருவவதாரம் செய்தபோது ஆறு கார்த்திகைப் பெண்கள் அவரைப் பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி வளர்க்கும் பெரும் பாக்கியத்தைப் பெற்றனர். இவ் விரதத்தின் சிறப்பினையும், மகிமையையும் சிவபெருமான் கார்த்திகைப் பெண்களுக்குக் கூறி அருள்பாலித்தார். முருகன் அவர்களிடமிருந்து வளர்ந்த காரணத்தால் அவர்களின் நாளான கிருத்திகை நட்சத்திரத்தில் விரதமிருந்து கந்தனை வழிபடுவோர்க்கு கல்வி, செல்வம், ஆயுள், நல்லமனைவி, மக்கள், சகல செல்வங்களும் பெற்று வாழ்வார்கள் என சிவபெருமான் அருள்புரிந்தார். பரணி நாளில் விரதம் தொடங்கி, கார்த்திகையில் உபவாசம் இருந்து வழிபாடு செய்து அடுத்தநாள் ரோகிணியில் காலையில் நீராடி, நித்திய வழிபாடு செய்து அடியார்களோடு உணவு உண்ண வேண்டும். திருக்கார்த்திகை தினத்தன்று தீபங்கள் ஏற்றி இறைவனைச் சோதிவடிவில் வழிபடுவர். பிரம்மா, விஷ்ணுவுக்கு சிவராத்திரி தினத்தன்று தமது சோதி வடிவைக் காட்டினார். அவர்கள் வேண்டுதலால் இவ்வுருவை மீண்டும் திருக்கார்த்திகை தினத்தில் காட்டுவோம் என அருளினார். இதனை கார்த்திகை தீபமாக கொண்டாடுகிறோம்.

ஆலயங்கள் தோறும் அன்று சொக்கப்பானை கொழுத்தப்படும். கட்கப்பனை எனும் சொல்லின் திரிபே சொக்கப்பானை எனப்படுகிறது. இத் தீ சுவாலை விட்டு எரியும்போது

*நம்பிக்கை போன்ற சிறந்த மருந்து வேறு எதுவுமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிரூபமாகவும், திருவண்ணாமலை தீபமாகவும் மக்கள் வழிபடுவர். மாவிளக்கேற்றி முருகன் ஆலயங்களில் வழிபடுவர். முருகன் ஆலயத்தில் நிகழ்வது குமராலய தீபம். அடுத்தநாள் பௌர்ணமியன்று ஏனைய ஆலயங்களிலும், வீடுகளிலும் கொண்டாடப்படுவது சர்வாலய தீபம். மறுநாள் விஷ்ணு ஆலயங்களில் கொண்டாடப்படுகிறது விஷ்ணுவாலய தீபம்.

தீபத்திருநாளில் அக இருள் போக்கி ஞான ஒளிபெற வேண்டுமென பிரார்த்திக்க மெய்ஞானம் உண்டாகி முத்தி பெறலாம். தீபம் பிரகாசிக்க லட்சுமி கடாட்சம் உண்டாகும். கார்த்திகை தீபத்தன்று மகாபலிச் சக்கரவர்த்தி முத்தி பெற்றார். கார்த்திகையன்று வீடுகள்தோறும் நிறைய அகல் விளக்குகள் ஏற்றவேண்டும்.

தீபமங்கள ஜோதி நமோ நம!
தூய அம்பல லீலா நமோ! நம!
தேவ குஞ்சரி பாகா நமோ நம! அருள் தாராய்!

சோதியே சுடரே சூழொலி விளக்கே
நீதியே நிர்மலா சரணம்
ஆதியே அந்த காரத்து இருளை
அகற்றும் பேரொளியே சரணம்
அலைமனம் அடங்க தூய் மனம் மலர
அருளது புரிவாய் சரணம்
கலையொரு ஞானம் நிதிபல கூடும்
அனாத சோதியே சரணம்.

சிவபிரானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய ஆறுமுகப்பரமன் ஜோதிஸ்வரூபன். கந்தவேள் கழலினை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொள்ளுங்கள். முருகன் திருவடிகள் அடியவர்களின் தலைமீது படப்பட பிரமனின் கை எழுத்து அழியும்.

"அவன் கால்பட்டழிந்தது இங்கு என் தலைமேல்
அயன் கையெழுத்தே"

-கந்தரலங்காரம்.

விதியை மாற்றும் சக்தி முருகன் திருவடிகளுக்குண்டு.

எமது உடல் ஒரு மனை. உள்ளம் பாத்திரம். அதில் உணர்வாகிய நெய்யை ஊற்றுதல் வேண்டும். உயிரெனும் திரியை இட்டு பிராணன் எனும் காற்றை நிறுத்தி, அறிவுச் சுடரை ஏற்றி அன்பினால் தூண்டிக்கொண்டிருக்க வேண்டும். இடைவிடாது தூண்டிக் கொண்டிருந்தால் ஆணவமாகிய மாய இருள் அகலும். சிவபரஞ்சோதி தரிசனம் கிடைக்கும். கார்த்திகை தீபதரிசனத்தின் உண்மைத் தத்துவம் இதுவேயாகும்.

ஆடிப் பாடி அண்ணாமலை தொழு
ஓடிப்போம் நமதுள்ள வினைகளே.

மகிமை பொருந்திய திருக்கார்த்திகை விரதத்தை அனுஷ்டித்து அண்ணாமலையாரினதும் உண்ணாமுலை உமையாளினதும் முருகவேளினதும் திருவருளைப் பெற்று உய்வோமாக.

*மனத் தைரியத்தை இழந்துவிட்டால் மனிதன் எல்லாவற்றையும் இழந்தவனாகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுடி விளக்கே போற்றி மாணிக்க மலையே போற்றி
கறை மணிக்கண்ட போற்றி கண்ணுதற் கரும்பே போற்றி
பிறைமுடிச் சடைகொண்டோங்கும் பேரருட் குன்றே போற்றி
சிறை தவிர்த்து எனை ஆட்கொண்ட சிவசிவ போற்றி போற்றி.

வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறைவில்லை மனமே கந்தனுண்டு கவலையில்லை மனமே.

(தொடரும்...

## தேரேறிவரும் முருகன் திருக்காட்சியைப் பாரீர்!

வேரோடு வினையறுக்கும் வேலன், சந்நிதிப் பதியில்,
தேரேறி வந்தருளும் திருக் காட்சிதனைப் பாரீர்!
பாரெங்கும் புகழ் மணக்கும் பன்னிருகை வேலவனைப்
பாடிமகிழ்ந் தேத்தவரும் பக்தருடன் சேர்ந்திடுவீர்!

மங்கள நாதம் ஒலிக்க, மணிகளும் "ஓம்" என்றொலிக்க,
எங்கணும் மாவிலைகளுடன் தோரணங்களும் தொங்க,
தங்க மயில் ஏறிவரும் தமிழ்க் குமரனின் அழகை
இங்கு வந்து பார்த்திடுவீர்! இனியன் அருள் பெற்றிடுவீர்!

சித்திரத் தேரேறிச், சிவன் மைந்தன் வரும் வேளை
எத்திக்கும் கரகங்கள், காவடிகளின் ஆட்டம்!
தித்திக்கும் தமிழில் அவன் திருப்புகழே ஒலித்திருக்கும்
மெத்தவுமே பக்தர்களின் சித்தங்கள் மகிழ்ந்திருக்கும்!

வள்ளலெங்கள் முருகனின் தேர் வடம்பிடித்திடப் பக்தர்
வெள்ளமெனத் திரள்கின்றார்! வெற்றிவேல் முருகனின், நல்
உள்ளத்தில் இடம்பிடித்து, உயர்நிலையை எய்துகின்றார்!
புள்ளி மயில் வாகனனைப் போற்றி மகிழ்ந் தேத்துகின்றார்!

நேர்த்திக் கடன்களினை, நிறைவேற்றுவார், பக்தர்,
கீர்த்தி மிகும் தலத்தில், பக்திக் கீதங்களும் இசைப்பார்! இதைப்
பார்த்தவர்களும் பக்திப் பரவசத்தில் ஆழ்ந்திடுவார்!
தேர்வரும் நற்காட்சி கண்டெம் தேவனருள் பெற்றிடுவார்!!

-கி. குலசேகரன்-

சலிப்பில்லாதவன் நிச்சயம் வெற்றியடைவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

**– திரு முருகவேே பரமநாதன்** அவர்கள் –

திரு+புகழ்= திருப்புகழ். திரு என்றால் செல்வம், இலக்குமி, அழகு, தெய்வம், சிவகதி, மோட்சம் என்று பொருள். ஒரு சொல்லினது பொருளின் செவ்வியை உயர்த்த இது பயன்படுத்தப்படலாம். புகழ்; கீர்த்தி, இதை கீர்த்திமையென்று பொருள் தரும். ஆக எம்பெருமானின் பெரும் புகழைப் பாடும் பக்திப்பனுவல் திருப்புகழ். இவ்வதியற்புதமான படையாம் சிவனிலும் வேறாகாத முருகப்பெருமானின் பெரும் புகழைப் பாவணத் தமிழில் வடித்தவர் அருணகிரியார்.

வாக்குக்கு அருணகிரியென்பர். பழைய மன்னர்களின் புகழைக் கல்லிலும் செம்பிலும் பொறித்து வைத்தனர். இவை மெய்கீர்த்தியென வழங்கியது. இறைவன் பெருமை பேசும் பாடல்கள் பிற்காலத்திற் கீர்த்தனையானது. ஆழ்வார்கள் ஸ்ரீமந் நாராயணனின் கீர்த்திகளை கீர்த்திமை, கீர்த்திக்கனியெனப் பாடி வைத்தனர். இந் நெறியாள்கையில் முருகன் பெருமை பேசும் திருப்புகழ் பதினாறாயிரம் என வரகவி மார்க்கசகாயன் பாடியுள்ளார்.

எம் அருணகிரிநாதர் ஓது
பதினாறாயிரந் திருப்புகழ் முழுதுமே மொத்தம்.

ஆனால் இன்று நமக்குக் கிடைத்த பாடல்கள் 1234தான். இந்தப் புகழென்னும் பதப்பிரயோகம் பக்தி இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. அப்பர் பெருமான் இப்படிப் பாடுகிறார்.

நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலு மெம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டு......

-6:31.1.

பெருமானைப் பாடியோர் பலர். அவர்களிற் சுந்தரரின் திருவாக்கு இது.

கூடிய இலயம் சதிபிழையாமைக்
கொடியிடை உமையவள் காண
ஆடிய அழகா அருமறைப் பொருளே
அங்கணா எங்குற்றாய் என்று
தேடிய வானோர் சேர்திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே.

-7:62:3.

*நல்ல ஆலோசனையை விரும்பிக் கேட்பது நம் திறமையை அதிகப்படுத்தும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமாலைக்கே பட்சமான பரம்பொருளுக்கு பூமாலை சூடியது போலப் பாமாலையும் பாடியளித்தனர். இப்புகழாரம் ஆழ்வார் வாக்கிலும் இடம்பெற்றுள்ளன. முதல் குலசேகரப் பெருமாள் திருமொழியில்

தூராத மனக்காதல் தொண்டர்தங்கள்
குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி
ஆராத மனக்களிப் போடமுத கண்ணீர்
மழை சோர என வருகிறது.

-பெருமாள் திருமொழி 1:9.

திருவாய் மொழி தந்த நம்மாழ்வார் இறைவன் புகழ் பேசும் பாசுரம் இது.

அகலகில் லேன் இறையு மென்
றவர் மேல் மங்கையுறை மார்பா
நிதரில் புகழாய்
றுடையாய் என்னை ஆள்வானே
நிகரில் அமரர் முனிக் களாங்கள்
விரும்பும் திரு வேங்கடத்தானே
புக லொன்றில்லா அடியேனுன்
அடிக் கீழமர்ந்து புகுந்தேனே.

-திருவாய் மொழி 6:10.10.

வாழையடி வாழையாக வந்த வள்ளலாரும் இறைவன் புகழ் பாடி மகிழ்கிறார். அதையும் பார்ப்போமே.

ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள் ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்.

-அருட்பா திருமுறை 1.3.

இவர்கள் எல்லாரையும் விடக் காலத்தால் முந்திய வள்ளுவர் தன் கடவுள் வாழ்த்தில் இறைவனின் புகழ் பற்றிப் பேசுகின்றார்.

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

-குறள் 5.

இறைவனது மெய்ம்மை பொருந்திய புகழை விரும்பி எப்போதும் அன்பு செலுத்துவார் இடத்தில் அறியாமையால் வருகின்ற நல்வினை தீவினையாகிய இரு வினைகளும் சேர்வதில்லை. நன்மை பொன் விலங்கு. தீமை இரும்பு விலங்கு. இரண்டும் விலங்குதான். இறைமைக் குணம் இல்லாதாரைப் புகழ்வது பொருள் சேரா ஆனபடியால் முற்றறிவுடைய இறைவன் புகழே பொருள்சேர் புகழ் என்றார். ஓயாமல் அப் புகழைப் பாடுவதே புரிதல்.

*சமூகத்தை ஒன்றாகப் பிணைக்கும் சங்கிலி கருணை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பாரம்பரிய மரபில் வந்த அருணகிரியார் தந்தவையே திருப்புகழ். இ∴து வேறு எம்மொழியிலும் இல்லை. அருணகிரியார் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு, சேவல் விருத்தம், மயில் விருத்தம், வேல் விருத்தம் என்னும் ஆறு பிரபந்தங்களைப் பாடியுள்ளார். சைவ சமய பக்தி இலக்கியங்களிற் திருப்புகழ் தனிச் சிறப்புடையது. இப்பாடல்களெல்லாம் தாளக் கட்டோடு கூடிய சந்தம் நிறைந்த தமிழ்ப் பாடல்களாகும். இவ்வருகை தமிழுக்கே சிறப்பு அம்சமாகும். மட்டுமன்றி புதிதுமாகும்.

இதிலே தோய்ந்த தாயுமானவ சுவாமிகள் இப்படிப் போற்றுகின்றார்.

ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?

கந்தரனுபூதி பெற்றுக் கந்தர் அநுபூதி சொன்ன
எந்தை யருள் நாடி இருக்கு நாள்
எந்நாளோ.

மதிமை- அறிவின் தன்மை. இசைமை- புகழ்.

மணிவாசகப் பெருமானும் கீர்த்தித்திரு அகவல் பாடினார்.

திருப்புகழ் படிப்போர்க்கு என்ன குறையும் வராது என அருணகிரிப் பெருந்தகையே உத்தரவாதஞ் செய்கிறார்.

திருப்புகழை உரைப்பவர்கள்
படிப்பவர்கள் மிடிப்பகைமை
செயித்தருளு மிசைப் பிரிய
திருத்த மாதவர் புகழ் குருநாதா.
-165.

முருகனைப்பற்றி சிதம்பர சுவாமிகள், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், வள்ளலார் போன்ற பலர் பாமாலை பாடி இருப்பினும் திருப்புகழைப் படிப்பவர் முன்னே முருகன் விரைந்து வருவானென்பதை அருணகிரியார் தன் அனுபூதியாற் காட்டினார்.

## விருப் போடு மயில் ஏறும் வேல் முருகன்

ஆற்றங் கரையானே வேல்முருகா - எமக்கு
அபயம் அளித்திட வா முருகா
சோற்றுப் பசிக்களை தீர்ப்பவன் நீயே
சோம்பல் வராமல் என்றும் காத்தருள் வாயே
வேற்படை வேலனது குடியிருப்பு
விரும்பி மலை அமர்வது முருகன் விருப்பு - தன்னைப்
போற்றிடும் அடியார்க்கு கந்தன் அருள் விரிப்பு
மயிலேறி விளையாடிட குமரன் மனம் தவிப்பு.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*அன்பான செயல் மருந்தாகவும் இருக்கும். நல்வாழ்த்தாகவும் இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 74

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 காகத்தைக் கரைந்துகூவி வாவென்று வரவழைத்து
பாகத்துச் சோறளித்து அது உண்டபின் உண்டுவிட்டு
தாகத்தால் பின்னொருநாள் அதுதவித்து வந்து கரைந்த வேளை
கோவத்தால் கல்லெறிவோம் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

02 கல்லிலோர் நாயைச் செய்து கட்டிடம் ஒன்றுள் வைத்து
சரமாக்க வடைகள் சுட்டு சூடியே வணங்கிவிட்டு
உரத்ததோர் குரலைக்காட்டும் ஊர்நாயைக் கண்டு விட்டால்
துரத்தியே அடித்தும் கொல்வார் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

03 பால்தரும் பசுவைத் தெய்வம் என்றதை மதித்துவந்து
கால்தொட்டு வால்வரைக்கும் கடவுளாய் வணங்கிவிட்டு
பால்வற்றிப் போனதென்று நால்வரோடைவர் சேர்ந்து
தோல் நீக்கித் தசை சமைப்பார் இறைநிசத்திலில்லை நிழலிலாமோ.

04 சந்நிதி முருகனென்றோர் வண்டியில் நாமம் தீட்டி
புண்ணிய தலங்களோடிப் பூசைகள் பண்ணிவிட்டு
பின்னரோர் வேள்விதன்னில் வெட்டிய ஆடுமேற்றி
உண்ணவே கொண்டு செல்வார் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

05 அறுகெடுத்து ஆண்டவனின் அம்சமென்று அதை வணங்கி
அதுபோல வேரூன்றி வாழ்கவென்றும் வாழ்த்திவிட்டு
பத்தறுந்து போகாதாம் அறுகென்றும் சுட்டெரிப்போம்
இத்தனைக்கும் இறைவனார் நிசத்திலில்லை நிழலிலாமோ.

06 ஆண்டவரே இறைவா என்று நாங்கள் தினம் வணங்கி
தாண்டவங்கள் பலஆடி அவன்புகழைப் பேசிவிட்டு
சிலையென்றும் படமென்றும் வியாபாரச் சின்னமென்றும்
வீதியிலும் விட்டெறிவோம் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

*ஆறாத துயரத்தை போக்கவல்லது காலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பிள்ளையார் பிடித்துப் பொங்கல் தன்னிலே வைத்துப் பொங்கி
அள்ளியே மோதகத்தால் அபிஷேகம் செய்துவிட்டு
துள்ளியே ஓடும் ஆற்றில் தூரவே எறிந்தும் நிற்போம்
இறைபக்தி இதுதானென்றால் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

08 கோயிலில் சிலைகளென்போம் வீட்டினில் படங்களென்போம்
பப்படத்தில் பற்பொடியில் வியாபாரச் சின்னமென்போம்
இப்படி எல்லாம் நாங்கள் இறைவனை எண்ணிக் கொண்டால்
எல்லாம் செப்படிவித்தைதானோ இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

09 மரத்திலோர் எலியைச் செய்து ரதத்தினில் அதனை ஏற்றி
கரத்தினில் ஐந்தானுக்கு வாகனம் ஆக்கிவிட்டு
இறப்பிலோர் பொறியை வைத்து இருக்கின்ற எலியைக் கொன்று
பருத்ததோர் பூனைக்கிடுவோம் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

10 சட்டியில் தீயை மூட்டி சிரசினில் அதனைத்தாங்கி
திருத்தல வீதிசுற்றி நேத்தியை முடித்துவிட்டு
மூட்டியே தீயைக் கோயில் வாசலில் குளித்தலென்று
காலினால் மிதித்தும் செல்வோம் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு நலம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

உணவு, உடை, உறையுள் - மனை ஆகியன மனிதன் வாழ்வதற்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகள் ஆகும். அவற்றுள் உணவு மனிதரின் உடல் வளர்ச்சிக்கும், மனநலத்திற்கும், உயிர் வாழ்வதற்கும் மிகவும் இன்றியமையாதது. நாம் உண்ணுகின்ற உணவின் தன்மையைப் பொறுத்தே உடல் ஆரோக்கியம், குணநலன்கள், பண்புநலன்கள் மற்றும் மனத்தின் தன்மைகள் அமையும் என ஆன்றோர்கள் கூறியுள்ளனர்; விஞ்ஞானமும் ஏற்றுக்கொள்கின்றது. தாவர உணவு, சாத்வீகக் குணங்களையே மனிதரில் வளர்க்கின்றது. இவ்வுண்மையை அறிவியல் ஆய்வாளர்களும், ஆராய்ந்து ஏற்றுக்கொள்கின்றனர்.

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்" என்று கூறும் திருமூலர், பின்னர் தமது இக் கருத்தை மாற்றிக்கொண்டார். அடுத்து வரும் பாடல் வரிகளில் "உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்; உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே" என்று உடம்பின் முக்கியத்துவத்தையும் அதனை ஓம்பியும் பேணியும் வரவேண்டியதன் இன்றியமையாமையையும் பாடலில் உணர்த்துகிறார்.

"ஊன் உடம்பு ஆலயம்" என்கிறார் திருமூலர். அதனுள்ளே ஆன்மா கோயில் கொண்டிருக்கிறது.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" உயிரை உடம்பிலிருந்து பிரியாமல் பாதுகாக்க வேண்டுமாகில் உடல் நலம் நன்கு பேணிவருதல் இன்றியமையாதது. ஆதலால் உடம்புநலம், பலம், ஆரோக்கியம் நன்கு பேணப்படவேண்டும் உடல்நலம், பலம் உணவு நலத்திலேயே பெரிதும் தங்கியுள்ளது. ஆதலால் உணவுநலம் நன்கு பேணப்படவேண்டும்; ஒருபோதும் அலட்சியம் செய்தல் ஆகாது. அதேவேளை உணவு உண்டுதான் உயிர் வாழவேண்டும் "உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே" என்பது அதுபற்றிய பாடலடி.

"உணவு மிகினும் குறையினும் நோய் வருத்தும்" ஆதலால் உணவில் சமநிலை பேணி வரவேண்டியது இன்றியமையாதது. உணவு நலத்தில் ஓர் அங்கம் உண்ணும்போது உணவில் அளவு, முறை என்பவற்றைக் கடைப்பிடித்தல் ஆகும்.

"நீ சீரணிக்கும் அளவிற்குள்ளாக உணவை உட்கொண்டால், உணவை நீ சீரணிக்கிறாய். அதிகமாக உட்கொண்டால் உணவு உன்னைச் சீரணிக்கும்" என்கிறார் பேராசான் வேதாத்திரி மகரிஷி.

உணவைக் குறைப்பதும்; நேரம் தப்பி அகால நேரத்தில் உணவை உண்பதும்; பட்டினி கிடப்பதும்; உணவு தாராளமாகக் கிடைக்கின்றது என்பதால் வகை தொகையின்றி உணவை உட்கொள்வதும்; உணவு சுவையாக இருப்பதன் காரணமாக அளவு முறை பேணாமல்; நேரம் தப்பியும் உண்பதும்; பசி எடுக்காமல் சாப்பிடுவதும்; தமக்குத் தாமே செய்யும் துரோகம் ஆகும்.

உணவு நலம் ஓம்பிக், காத்து வருவதற்கும்; அதன்வழி உடல் நலம், மனநலம், உயிர்நலம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கும், நோயற்ற வாழ்வு வாழ்வதற்கும்; அறிவியல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவியல் விழிப்பு நிலை, மனத்தில் தெளிவு, உறுதி மற்றும் ஒழுக்க உணர்வு, பொறுப்புணர்வு போன்ற மனித விழுமியங்களை வளர்த்துக்கொள்ளுதல், மிகவும் அவசியம் ஆகும்.

உணவு உட்கொள்ளும்போது சுவையுணர்வுடைய நாக்கினைக் கேட்டு அதன் பணிப்பின் படி செயல்படுதல் ஆகாது. சுவையான உணவுகளை வகைதொகையின்றி வயிற்றுக்குள்ளே தள்ளிக்கொண்டே இருக்கும். அதேவேளை சுவையற்ற உணவுப் பதார்த்தங்களை வெறுத்து நிராகரித்துவிடும். அது நாவினது இயல்பு. சத்துணவு, சமநிலை உணவு என்ற உணர்வு நாவினுக்கில்லை. சுருங்கக்கூறின் உணவு நலம் பேணுவதில் நாவுக்குச் சிரத்தையில்லை. சுவையொன்றே அதற்கு முக்கியம். ஆன்மீக ரீதியில் "நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே" என்கிறார் அப்பர் பெருமான். நா நலம் வாழ்க்கையில் பேணப்பட்டு வந்தால் "ஒரு பொல்லாப்பும் இல்லை. இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற உன்னதநிலை எய்தப்பட்டுவிடும்.

வயிற்றைக் கேட்டு, அதன் ஆக்ஞைப்படி உணவு, நீர் பதார்த்தங்களை உட்கொண்டால், அந்த நிலையில் எல்லா நலங்களும் சுகங்களும் எய்தப்பட்டு விடுவது உறுதி. மீறினால் எஞ்ஞான்றும் துன்ப சாகரத்தில் மூழ்கி அல்லற்பட்டு, அவஸ்தைக்குள்ளாக நேரிடும். வயிறு, அதன் கொள்ளளவை மீறி, உணவை அது எத்துணை சுவை நிறைந்ததாக இருப்பினும் ஏற்றுக்கொள்வதில்லை. மீறினால் வெளியில் தள்ளிவிடும்.

வயிற்றின் அரைப்பாகம் உணவினாலும் கால் பாகம் நீரினாலும் நிரப்பி மிகுதி காற்பாகம் வெறுமையாக இருத்தல் வேண்டும். அப்பொழுது உணவு நலம் உறுதியாகிவிடும். ஆக்கமும் கேடும் அதனால் வருவதால் உணவு நலம் காத்து, ஓம்பி வருதல் இன்றியமை யாததாகும். "ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்; இரு நாளைக்கே வென்றால் ஏலாய்..." என்று கூறி "உன்னோடு வாழ்தல் அரிது" என்று புலம்புகிறார் ஔவைப் பிராட்டியார்.

ஒரு நாளுக்கு உணவு உண்ணாமல் இரு என்றால் வயிறு ஏற்றுக்கொள்ளாது அடம் பிடிக்கும். அதேவேளை உணவு கிடைக்கும்போது இரண்டு நாட்களுக்குரிய உணவை ஒரே முறையில் "உண்" என்றால் அதற்கும் இசைந்துகொடாது என்று புலம்புகிறார் புலவர். வயிறு "உணவு போதும்" என்று திருப்திகொள்ளும். அதேவேளை, மனத்தால் ஆளப்படுகின்ற நாக்கு சுவையான உணவு என்றால் "போதும்" என்று திருப்திகொள்வதில்லை.

உணவு நலம் பேண விரும்புபவர்கள், நாவிற்கு அடிமையாதல் ஆகாது. உணவு மனிதரைச் சௌக்கியமாக வாழ்விக்கும் அமிர்தமும் ஆகலாம்; அதேவேளை உயிர் பறிக்கும் நஞ்சும் ஆகலாம். அளவுமுறை, உண்ணும் நேரம், மீறி உணவை உட்கொண்டால், உணவு நஞ்சு ஆகி, உயிரைப் பறிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லலாம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

உணவு மனிதரை வாழ்விக்கும் அமிர்த சஞ்சீவி; அளவோடு உட்கொள்ளும்போது அதேவேளை, ஆலகால விஷமாகும் அளவு மீறும்போது என்பதை உணர்ந்து செயல்பட்டால், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம், உடல்நலம், உயிர் நலம் ஓங்கி வளமாகவும் நலமாகவும் வாழமுடியும் என்பது ஆன்றோர் வாக்கு. மனிதத் தேவைகளாக, இளமையைப் பாதுகாத்தல், முதுமையில் இனிமை, மூப்பிலும் நோயற்றவாழ்வு, மரணத்தைத்

*உலக இன்பம் நீர்க்குமிழிபோல மறையும் என்று சொல்பவன் சோம்பேறி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளி வைத்தல் என்பன உள்ளன. அதற்கு ஒழுங்கான உடற்பயிற்சி, மனநலம் பேணும் யோகா, தியானப்பயிற்சி, மூச்சுப்பயிற்சி, சீரான வாழ்க்கைமுறை என்பவற்றுடன் உணவுநலம் பேணி வருதலும் இன்றியமையாதன.

உணவைக் கொட்டுதல், வீணாக்குதல், பதுக்கி வைத்தல், உண்ணும்போது சிந்துதல், அளவுக்குமீறி உண்ணுதல் என்பன தெய்வ தண்டனைக்குரிய தண்டனையாகும். தானங்களில் மிகச் சிறந்தது அன்னதானம். உணவு, நீர், காற்று என்பவை மனிதர் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியத் தேவைகள். பசித்து வருபவர்களுக்கு உணவளித்து, அவர்களின் பசிப்பிணியை நீக்குதல் அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறம் ஆகும்.

“விருந்து புறத்ததாத் தானுண்டவ் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று”
-திருக்குறள் 82.

விருந்தினராகப் பசித்து வந்தவர், வீட்டின் புறத்தே இருக்கத்தக்கதாக; தான் மட்டும் உண்பது சாவா மருந்தாகிய அமிழ்தமே ஆனாலும், அது விரும்பத்தக்கதன்று என்பது இக்குறட்பா தரும் கருத்து ஆகும். உண்ணும் உணவு, பருகும் நீர், சுவாசிக்கும் காற்று இவையின்றி மனிதர் உயிர் வாழ இயலாது. அவ்வாறிருக்க உணவை வீணாக்குதல், குப்பைத் தொட்டிக்குள் போடுதல் எத்துணை மாபாதகச் செயல் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆலயங்களுக்கு அருகாமையில் உள்ள திருமடங்களில் இடம்பெறும் அன்னதானங் களில் உணவு உண்பவர்கள் இலவசமாகக் கிடைக்கின்றதே என்பதால் உண்ணும்போது அளவு மீறுதல், கொட்டுதல், சிந்துதல் என்பவற்றைத் தவிர்த்துக்கொள்ளுதல் புண்ணிய கைங்கரியமாகும்.

உலகில் பிறக்கின்ற ஒவ்வொருத்தரும் இன்பமாக வாழ விரும்புகின்றமை மனித இயல்பு. அவர்களது மகிழ்ச்சியான வாழ்க்கைக்குப் பல சிறந்த வழிமுறைகளைப் பல்வேறு மதங்கள் முன் வைத்திருப்பினும், எல்லா மதங்களும் ஏகமனதாக ஏற்றுக்கொள்கின்ற ஒரு வழிமுறை அன்னதானம் செய்தல் ஆகும்.

அன்னதானம் மனமுவந்து, முன்வந்து செய்பவர்களுக்கு செல்வ வளம், உடல் ஆரோக்கியம், நீளாயுள், உயர்புகழ், மெய்ஞானம், சந்ததி விருத்தி யாவும் கிடைக்கும் என தர்மசாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

மாதா பிதா செய்யும் புண்ணியம் மக்களைக் காக்கும், சந்ததி விருத்தியாகும்.

அன்னம் வழங்குபவள் என்பதால், தாயை அன்னை என்று அழைப்பர்.

“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”

“மக்கள் சேவையே மகேசன் சேவை”

“தானங்களில் சிறந்தது அன்னதானம்”

“வாய் வாழ்த்தாவிட்டாலும் வயிறு வாழ்த்தும்”

“தர்மம் தலை காக்கும்”

“பசித்தோர் முகம் பார், பரமன் அதில் தெரிவார்”

*கடவுள் என்னும் மெய்ப்பொருள் ஒன்றே. உயிர்கள் எல்லாம் அதன் வடிவங்களே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தார் தம் வீட்டிலும் அன்னதானம் செய்யலாம்; அரிசி, காய்கறிகள் என்பவற்றைப் பொருளாகவும் அல்லது பணம் ஆகவும் அன்னதான மடங்களுக்கு வழங்கலாம். எவ்வாறாயினும் அன்னதானம் செய்தல் பெரும் புண்ணியம் ஆகும். பயனை எதிர்பாராது செய்தலே சிறந்த அறப்பணியுமாகும்.

நாம் அறிந்தும் அறியாமலும் செய்த, செய்கின்ற பாவங்கள் தீர, மிகச் சிறந்த வழி அன்னதானம் ஆகும். சைவத் தமிழ்மக்கள் குறிப்பாக ஈழவள நாட்டில் அன்னதானம் பண்டுதொட்டு செய்தும், செய்பவர்களுக்கும் சிறப்பாக அன்னதான மடங்களுக்கும் உதவியும் வருகிறார்கள்; உதவி வருபவர்கள் மெச்சுதலுக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள் ஆவர்.

எமது எண்ணங்கள், செயல்கள் மற்றும் குணநலப்பண்புகள் யாவும் நாம் உட்கொள்ளும் உணவு மற்றும் பானங்கள் என்பவற்றினாலேயே பெரிதும் தீர்மானிக்கப்படுகின்றன என்று நூல்கள் மற்றும் அனுபவங்கள் வாயிலாக அறிகிறோம். சாத்வீக உணவு, இராசத உணவு, தாமசகுண உணவு என்று மூன்று வகையாக உணவுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தாவர உணவு எனப்படும் சைவ உணவு, சாத்விக உணவு வகையைச் சார்ந்தது. காய்கறிகள், கனிகள், தானியங்கள், கீரைவகைகள், கிழங்குகள், பூக்கள், பழவகைகள் உள்ளிட்ட சைவ உணவுகளை உண்பதால்; சாத்வீக குணங்கள் மற்றும் பண்புகள், சாந்தமான குணங்கள், மனிதாபிமானம் ஆகிய நற்குண நற்செய்கைகள் என்பன மனிதரில் விருத்திபெறுகின்றன.

மாறாக அசைவ உணவு மனிதரில் உடல் நலம் மற்றும் ஆரோக்கியம் என்பவற்றைப் பாதிப்பதுடன் மனநலம், மனப்பண்பு மற்றும் ஆன்மநலம் என்பவற்றையும் சீரழித்து விடுகின்றது. அதனால் இராட்சத மற்றும் மிருக குணங்கள்; மந்த புத்தியையும் மனிதரில் அபரிமிதமாகப் பெருக்கெடுக்கக் காரணமாக, அசைவ உணவுகள் அமைந்துவிடுகின்றன. ஆய்வுமூலம் கண்டறியப்பட்ட ஆதாரபூர்வமான உண்மை இதுவாகும். மிருக குணங்கள் பெருகப் பெருக பஞ்சமா பாதகங்களும் பெருக்கெடுக்கின்றன என்பது ஆய்வாளர் முடிபு. மிருக குணங்கள் மனிதரில் பெருகும்போது சமூகத்தில் பஞ்சமா பாதகங்களும் பெருக்கெடுக்க; அமைதியின்மை, குழப்பங்கள், போர்முனைப்புகள், உயிரழிவுகள் என்பன உலகில் சர்வ சாதாரணமாகி விடுகின்றன.

மனிதர்களாகிய நாம், உயிர் வாழ்வதற்காகவே உணவு உண்ண வேண்டும். அதேவேளை உண்பதற்காகவே வாழவேண்டும் என்னும் நிலைப்பாடு இருத்தல் ஆகாது. இந்த ஆன்றோர் கொள்கையை மனதார ஏற்று நலமாக வாழும்போதே, உணவு நலம் காத்து வாழ்வில் ஓம்பிவர வழி பிறக்கும். மனிதன் மனத்தை இதமாகவும் தூய்மையாகவும் வைத்திருக்கும் நிலை ஏற்படும். ஈற்றில் மனிதப்பிறவி எடுத்ததன் இறுதி நோக்கமான முத்தியின்பம் பெறுதல், பூரணமாக அடையப்பெறும். "மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்னும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் மகாவாக்கியம் நிறைவுபெறும் என்பதை உணர்வோமாக.

உணவு உண்பதற்கு முன்னர், இறைவனை வணங்கி, ஆசமனஞ்செய்து, சிறிது நீர் பருகி, அவனுக்கு நன்றிகூறி, உண்ணும் உணவு அமிர்த சஞ்சீவியாக விளங்கவேண்டும் என்று பிரார்த்தித்து; உணவளித்தோரை நன்றி உணர்வுடன் வாழ்க வளமுடன், வாழ்க

*மலர்ந்த முகமும் இனிய சொல்லும் இன்பமாக இருப்பதற்கு வழி வகுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமுடன் என மனதார வாழ்த்தி, சாந்தமனதுடன் உணவை உண்ணத் தொடங்க வேண்டும். உண்ணும்போது பிறருடன் பேசுதல், சிரித்தல், உணர்ச்சிவயப்படுதல், சினம் கொள்ளல், இரு கைகளையும் பயன்படுத்தல், எச்சில் உமிழ்தல், துப்புதல், இருமுதல், செருமுதல், பக்கத்தில் இருப்பவர்க்குத் தம் எச்சில் கையால் உணவு பரிமாறல், அடிக்கடி நீர் அருந்துதல், பல்லுக்குத்துதல், தலை சொறிதல், மயிர் கோதுதல், தலைமயிரைத் தொங்கவிடுதல் முதலிய வற்றைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும். திருமணம், அன்னதானம், பந்திபோசனம் போன்றவை; பலரும் பந்தியில் உட்கார்ந்து இணைந்து உணவு உட்கொள்ளும் சந்தர்ப்பங்கள் கொண்டவை. அவ்வாறான பொது இடங்களில் உணவு நற்பழக்கவழக்கங்களை இறுக்கமாகப் பேணிவரவேண்டியது இன்றியமையாதது. "சுத்தம் சோறிடும் எச்சில் இரக்கவைக்கும்" என்பது பொருள் பொதிந்த பழமொழி.

உணவு உண்பதற்கு முன்னரும் உண்ட பின்னரும் கைகள் இரண்டையும் "சோப்" போட்டு நன்கு உரஞ்சிக் கழுவிச் சுத்தம் செய்தல் மிகவும் இன்றியமையாதது. "கொரோனா" நோய் பரவிய காலத்தில் சுத்தம் பேணுவதற்கு நாம் எத்துணை தற்காப்பு முயற்சிகளில் ஈடுபட்டிருந்தோம். பலர் இன்று அவற்றில் பலவற்றைக் கைநழுவவிட்டு வருகிறார்கள். அது பெருந்தப்பு. தவறு என்பது பிழையென்பதைத் தெரிந்தோ, தெரியாமலோ செய்யும் பிழை. ஆனால் "தப்பு" என்பது பிழை என்று தெரிந்துகொண்டு அதனைச் செய்வது என்று அறிஞர் களால் விளக்கம் தரப்படுகிறது. தவறுதலாக விடும் பிழை தவறு எனப்படுகிறது. திட்டமிட்டுச் செய்யும் பிழை தப்பு எனப்படுகிறது என்று சுருக்கமாகக் கூறலாம். தூய்மை நலம், உணவு நலம் பேணுவதற்கும் காத்து ஓம்புவதற்கும் பெருந்துணையாகும். "நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம்" உணவு நலமும் தூய்மை நலமும் உடல்நலத்தைத் தாங்கும் இரு பெருந் தூண்கள் என்றால் அது மிகையாகாது.

உணவு நலம், தூய்மை நலம் இரண்டும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் போன்று உடல்நலம் பேணுவதற்கு இன்றியமையாதன. உயிர்நலம் பேணுவதற்கு உடல் நலம் பேணுதல் இன்றியமையாதது. உணவு நலம் உடல் நலம் இரண்டும் பேணப்பட்டு வரும்போதுதான் மனிதன் நோயற்ற வாழ்வு பெற்று, உயிர் நலம் காத்து நீளாயுள் பெற்று நெடுங்காலம் நலமாகவும் வளமாகவும்; சீரான செழிப்பான நிறைவாழ்வு வாழ, வழி பிறக்கும் என்னும் பேருண்மையை உணர்வோமாக.

"உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே". ஆப்த வாக்கியம்.

வாழ்க வளமுடன்; வாழ்க வையகம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| செப் | 11 | ஆவ 25 | திங்கள் | நீலகண்ட சிவாச்சாரியார் |
| செப் | 28 | புர 11 | வியாழன் | கடையிற்சுவாமி |
| அக்டோ | 28 | புர 25 | வியாழன் | அருணந்திசிவாச்சாரியார் |
| அக்டோ | 28 | ஐப் 11 | சனி | திருமூலர் |

*அச்சம் இருக்கும்வரை அறிவாளியாக முடியாது. அச்சமின்மையே அறிவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுகத்திற்கு உய்வைத் தருபவை

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

கலியுகத்திற்குரிய அவதாரம் முடிவடையும் காலம், யாதவ குலமே அழிய ஆரம்பிக்கின்றது. மக்கள் தீய கனவுகளைக் காண்கிறார்கள். அவர்களுடைய கனவிலே கண்ணபிரானுடைய ஒளிமயமான சக்கரம் யாதவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே விண்ணில் சென்று மறைகின்றது. கிருஷ்ணருடைய தேரை அவருடைய குதிரைகள் இழுத்துக்கொண்டு சமுத்திரத்தை நோக்கிச் செல்கின்றன. யாதவர்கள் கடல் ஓரத்தில் முளைத்திருக்கும் கோரைப் புற்களைப் பிடுங்க அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு இரும்பு உலக்கைகளாக மாறுகின்றன. அவர்கள் அவற்றை எடுத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு அழிகின்றார்கள்.

கிருஷ்ணர் இந்த அழிவைப் பார்க்கின்றார். இவை இவ்வண்ணம் நடக்க வேண்டியவை எனத் தெரிந்துகொள்வதன்மூலம் பக்கத்தே பலராமர் கண்ணபிரானை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றார். கிருஷ்ணர் வந்ததும் யோகம் செய்கின்ற பலராமருடைய முகத்திலிருந்து வெண்மையான 1000 ஒளி நாகம் வெளிப்படுகிறது. மலை போன்ற ஆதிஷேசன் என்னும் நாகம் கடலில் பிரவேசிக்கிறது. ஆதிஷேசனை நாகங்கள் நல்வரவு கூறி வரவேற்கின்றன. அவருடைய அவதாரம் முடிவெய்துகிறது. கிருஷ்ணர் அதன்பின் ஒரு மரத்தடியில் அமர்கிறார். வைகுந்தம் செல்லத் திருவுளம் கொண்டு யோக நிலையில் ஆழ்கிறார்.

அப்போது முனிவர்கள், சித்தர்கள் முதலிய பெரியவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரை நோக்கி வந்து வணங்கி "பகவானே! நீங்கள் எங்கள் எல்லோரையும் விட்டு வைகுந்தம் செல்லுகின்றீர்கள். இனி வரவிருக்கும் கலியுகத்தில், வெம்மையான அந்த யுகத்தில், உம்மை விட்டால் எமக்கு உய்வு ஏது?" என்றார்கள்.

அதற்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் பின்வருமாறு கூறியருளினார். "முனிவர்களே! நீவிர் வருந்த வேண்டாம். கொடியதான கலியுகத்தில் உங்களுக்கு 5 பொருட்கள் உய்வைத் தரும். அவற்றை இடைவிடாது தினமும் பூசித்து நன்மை அடையுங்கள்" ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களைத் தேற்றி உபதேசித்து அனுப்புகிறார்.

அப்பொருள்களாவன

1) சந்திரனைச் சடையில் தரித்த சிவபெருமானுடைய திருவடிக் கமலங்கள்
2) அத் திருவடியைப் பூசிக்க நீர்
3) அர்ச்சிக்க மலர்
4) சிந்திக்க திரு ஐந்தெழுத்து
5) பூசிக்கொள்ளத் திரு வெண்ணீறு

இந்த ஐந்து சாதனங்களும் கலியுகத்தில் எவர்க்கும் துணை நிற்கும் எனக் கூறி கிருஷ்ண பகவான் தனது அவதாரத்தை முடித்துக் கொள்கிறார்.

*மனிதனுக்குப் பிரச்சினை இல்லை என்றால் கடவுளுக்கு அர்ச்சனை இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திங்கள் கண்ணிப் பூத்தேள் சேவடிக்கமலம் உண்டு
கொங்கவிழ் மலரும் உண்டு
குளிர் தரு புனலும் உண்டு
தங்கும் அஞ்செழுத்தும் உண்டு
தவள வெண்ணீறுமுண்டு
வெங்கலிக்கு உடைவதெனனே
வெளிற்று அறிவு உடையரே போல" என்றது பாடல்.

எனவே, சைவ சமயத்தின் முழு முதலான சிவபெருமானை நாடி தினமும் துதிப்போம்! அவனருளாலே அவன் தாழ் வணங்கி, சிந்தை மகிழ்வோம். மலரிட்டு அர்ச்சிப்போம் சாம கானப் பிரியனான சிவனை பண்பாடித் துதிப்போம். சுகந்தம் மிகு தூப தீபம் காட்டிப் பூசிப் போம். இதையேதான் அப்பர் சுவாமிகளும் "சலம் பூவோடு தூபம் மறந்தறியேன் தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" எனப் பாடியருளினார்.

சிவனுக்கு உரிய திரு ஐந்தெழுத்தை ஓதுதல் நன்மை பயக்கும். ஆனால் எந்நேரமும் அதை நாம் ஓதுதல் என்பது சாத்தியமானதன்று. எனவே காலையிலும் மாலையிலும் விபூதி அணியும்போது தன்னும் நாம் மறவாது திருஐந்தெழுத்தை ஓதுவோம். எமது குழந்தைகளுக்கு விபூதி இட்டு விடும்போது அந்த மந்திரத்தை உச்சரித்து இடுவோம். நாள்தோறும் இம்மந்திரம் அவர்கள் செவிவழி புகுந்து மனதிலே பதியட்டும். நெற்றியிலும் நாவிலும் இலட்சுமிகரம் துலங்கட்டும். தீமைகள் அகல நன்மைகள் எம்மை அடையட்டும். அகத்தும் புறத்தும் சைவ மணம் கமழட்டும். நாம் சமய பழக்கவழக்கங்களை குறைத்து எடைபோடக் கூடாது.

சில பெற்றோர்களுடைய அசிரத்தையாலே பிள்ளைகள் எழுத ஆரம்பிக்கும்போது பிள்ளையார் சுழி போடும் வழக்கத்தையே மறந்து விட்டார்கள். பிள்ளையார் சுழி என்றால் என்ன என்கிறார்கள். இதில் எமக்கு நம்பிக்கையில்லை என்று பதில் கூறுகின்றார்கள். கேட்க மனதில் பகீர் என்கிறது. இந்நிலை தொடர வேண்டுமா? வேண்டாம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பெரியோர்கள் தங்கள் குழந்தைகட்கு, சமய உண்மைகளை நம்பிக்கைகளை அவர்கள் மனதில் பதியுமாறு எடுத்துக் கூறுங்கள். அவர்களை ஆலயத்துக்கு அழைத்துச் செல்லுங்கள். அவர்களுக்கு அங்கு என்ன புரியப்போகிறது என்றுமட்டும் நினைத்து விடாதீர்கள். அவர்களுக்குத்தான் புரியவேண்டியவை நிறைய உண்டு. அவர்கள் மனதிலேதான், சமய நம்பிக்கை, சமய பழக்கங்கள் என்னும் விதைகள் விதைக்கப்பட வேண்டும். இதனால் வீட்டிலே சமய நம்பிக்கை வளரும். நாட்டிலே அது பிரதிபலிக்கும். தீயது செய்ய மனம் அஞ்சும். தர்மம் செய்ய மனம் தூண்டும். மேன்மைகொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்கும்.

---

ஒருமுறை சிலர் ஆறுமுகநாவலரிடம், "ஐயா தாங்கள் நூல்களில் எழுதுவதைப் போன்றும், சொற்பொழிவுகளில் பேசுவதைப் போன்றும் நடைமுறை வாழ்க்கையில் நடக்கிறீர்களா?" என்று கேட்டனர். அதற்கு நாவலர், "சின்னச் சின்ன ஊருக்குச் செல்லும் வழி இது என்று வழிகாட்டும் வழிகாட்டிப் பலகை, வழிகாட்டி நிற்கிறதே தவிர, தானும் அவ்வழியில் எங்கேனும் செல்கிறதா? இல்லையல்லவா? நானும் அந்த வழிகாட்டிப் பலகை போன்றவன்தான்" என்று பதிலளிக்க, கேள்வி கேட்டவர்கள் அவரது தன்னடக்கத்தில் வியந்துபோயினர்.

*ஒருபோதும் உங்களை நியாயப்படுத்திக்கொள்ள பிறரைக் காயப்படுத்தி விடாதீர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லா மூர்த்தங்களையும் ஓர் இடத்தில் ஒன்றுசேரத் தரிசிப்பது சிதம்பரம் ஆகும்

– திரு க.கு.க. சிவபாலன் அவர்கள் –

தில்லையில் கூத்தப்பெருமானை சிவகாமியம்மை
கண்டுகளிக்க ஞானமயமான பொன்னம்பலத்திலே
ஆடியருளும் செயல் உலகத் தோற்றம்
தொடங்கிய முதலே நிகழ்ந்து வரும்
தொண்மை வாய்ந்தது ஓம் நமசிவாய.

**மானுடம் வானாள வழி செய்தான்.**

தலைமிசை வானவர் தாழ்சடை நந்தி
மிலைமிசை வைத்தனன் மெய்ப்பணி செய்யப்
புலைமிசை நீங்கிய பொன்னுல காளும்
பலமிசை செய்யும் படர் சடையோனே.

வானவர் தலைவனாக விளங்குகின்ற, விரிந்து தாழ்ந்த சடைமுடிகளை உடைய பரம்பொருள், அருட்பணி செய்ய, அடியார்கள் தலைமேல் தனது திருவடிகளைச் சூட்டி அருளினான். கிழிந்த ஊனுடம்பை, அதைப் பற்றியுள்ள மலங்களை நீக்கி, மானுடத்தையும், வானுலகாளும் வல்லமை பெறுதற்கே அவன் பயனை அடையச் செய்தான்.

நானாவகையான ஊர் வம்புகளைப் பேசி வாழ்நாளை வீழ்நாளாகச் செய்வது நம்முடைய வாழ்நாளில் ஒவ்வொரு நிமிடமும் விலைமதிக்கமுடியாத மாணிக்கமாகும். அதனை அவமே செலவழிக்கக்கூடாது. ஏனைய உயிர்களுக்குக் கண்ணுண்டு, காதுண்டு, காலுண்டு, மூக்குண்டு. குரங்கு, யானை, யாளி இவைகளுக்குக் கையுண்டு. ஆனால் பேசுவதற்கு அனுகூலமான வாயில்லை. அந்த வாய் உண்பதற்கு மட்டும் உடையதேயன்றி உரைப்பதற்கு உடைத்தன்று. கண்ணிந்திரியம் பார்ப்பதற்கும், மூக்கு உயிர்ப்பதற்கும், செவி கேட்பதற்கும் மட்டுமே ஏற்பட்டது. ஆனால் வாய் உண்பதற்கு மட்டும் ஏற்பட்டதன்று. உண்பதற்கும் உரைப்பதற்கும் ஏற்பட்டது. இரு தொழில் செய்கின்றது வாய் உண்பதால் கன்மேந்திரியமாகும்; உரைப்பதனால் ஞானேந்திரியமாகும். இங்கு உண்பது வெறுந் தொழில் உரைப்பது அறிவின் தொழில் அவனவன் அறிவுக்கு தக்கவாறு அந்த சொற்கள் அமைத்து உரைப்பதற்கு ஏற்றதாக வாக்கியத்தை இறைவன் நமக்குத் தந்தான். அந்த வாக்கினால் இறைவன் புகழையும், பிறருக்குபகாரமான சொற்களையும் சொல்ல வேண்டும். இதனை மறந்து "வெடுவெடு" என்றும் கடுமொழிகளையும், சதா பிறரைப்பற்றி பழமொழிகளையும், பிறர் குறைகளையும் ஊர் பொது இடங்களில் வேலையில்லாது வீணர்களுடன் இருந்து ஊர் வம்புரைகளையும் சதா பேசிப் பொழுது கழிப்பவர்கள் மனிதருக்குள் பதர்கள் ஆவார்கள். இப்படிப் பேசுவார்க்கு இம்மை, மறுமை இரு நலன்களும் அழிந்துவிடுகின்றன. உலகத்தவராலும் வெறுக்கப்படுவர்.

*விதியின் சதிகளை தாங்கிக்கொள்வதுதான் அதை வெற்றிகொள்வதற்கான வழி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலினால் எப்போதும் பயனுடைய சொற்களைப் பேசி, வாழ்நாளை புனிதமாகச் செய்து இம்மையில் புகழும், மறுமையில் புண்ணியமும் பெறுவோமாக. ஓம் நமசிவாய.

இதனை வம்பிற் சுற்றாது பரகதியை எளிதில் பெறும் வழியை அருணகிரிநாதர் 945ஆவது திருப்புகழ்மூலம் உணர்த்துகின்றார். "முத்தியை எளிதில் பெற"

"சங்கைத் தோடு சிலுகிடு சங்கிச்சட் கோல சமயிகள்
சங்கற்பித் தோதும் வெகுவித கலைஞானச்
சண்டைக்குப் கேள்வி யலமல மண்நிற்கும் பூசை யிடுமவர்
சம்பத்துக கேள்வி யலமல மிமவானின்
மங்கைக்குப் பாக னிருடிக ளெங்கட்குச் சாமியெனவடி
வந்திக்கப் பேசி யருளிய சிவநூலன்
மந்தரப்ரஸ்த் தாரதரிசன யந்த்ரத்துக் கேள்வி யலமலம்
வம்பிற்சுற் றாது பரகதி யருள்வாயே"

சந்தேகத்தோடு கூச்சலோடு வாதம் செய்யும், சண்டை செய்யும் கூட்டமாயுள்ள ஆறு வித சமயத்தினர்களும் தாம், தாம் உறுதிசெய்துகொண்டு பேசுகின்ற பலவிதமான சாத்திர ஞானச் சண்டைக்கு வேண்டிய கேள்வி அறிவு போதும் போதும்.

கடவுளுக்கென்று பூஜை செய்பவர்களுடைய செல்வமாம் கேள்வி அறிவும் போதும் போதும், இமயராஜனது பெண்ணாம் பார்ப்பதற்குப் பாகர் என்றும் ரிஷிகள் எல்லாம் எங்களுக்குச் சுவாமி என்றும், தமது திருவடிகளைத் துதிக்க ஓதி விளக்கியுள்ள சிவ நூல்களிற் கூறப்பட்ட மந்திரங்களின் கணக்குப் பிரமாணக் காட்சியை மந்திர சக்கரங்களைப் பற்றிய ஆராய்ச்சி, அறிவு போதும் போதும். வீணான சுற்றான வழிகளில் நான் சுற்றி அலையாமல் பரகதியைத் தந்து அருள்வாயே. ஓம் நமசிவாய.

சிவாலயங்களில் தனிச்சிறப்பு சிதம்பரத்தை தரிசிக்க முத்தி என்பது ஆன்றோர் அனுபவம். உலகெங்கும் உள்ள சைவர்களால் சிறப்பித்துப் போற்றப்பெறுவது தில்லைத் திருக்கோயிலே. ஆங்குச் சிற்றம்பலத்தில் ஆன்மாக்களாகிய நம் உய்வு கருதி அன்னை சிவகாமி முறுவலுடன் திருநோக்கம் செய்து கொண்டிருக்க, எஞ்ஞான்றும் ஆனந்தத் திருநடனம் ஆடிக்கொண்டிருக்கிறான் அற்புதக் கூத்தன் பொற் தில்லைக்கூத்தன்.

நில உலகம் என்னும் இப்போ உரு நங்கைக்கு இருதயத்தானமாக அமைந்திருப்பது தில்லைச் சிற்றம்பலமே. நாம் உறங்கும்போது உடம்பின்கண் இருதயத்தில் தத்துவங்கள் பலவும் ஒடுங்கி விழிப்பில் தத்தம் இடங்களை அடைகின்றன. அதேபோன்று பூவுலகில் உள்ள அனைத்துத் தலமூர்த்திகளும் இரவுக் காலத்தில் சிற்றம்பலத்தில்தான் வந்து சேர்ந்து வைகறையில் தத்தம் இடம் அடைகின்றன என்பது சாத்திர உண்மை. பூமண்டலத்தின் மைய ஈர்ப்பாக இருப்பது தில்லை என ஆன்றோர் கூறுவார்.

சிதம்பரம் கோயில் மட்டுமே நடராஜருக்கு ஐந்து சபைகள். அவை சித்சபை, கனகசபை, இராஜசபை, நிருத்தசபை, தேவசபை ஆகும். நடராஜப் பெருமான் ஆடும் இடம் அதாவது தங்கும் இடம் சித்சபையில் கூத்தப் பெருமான் நடராஜர் எப்போதும் இருக்கிறார். இதனை சிற்றம்பலம் எனவும் கூறுவர்.

*பல பிரச்சினைகளை சந்தித்தவனைப் பார்த்தால் தோல்விகூட துவண்டுவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்தில் ஆறு அபிஷேகங்கள் ஆகும். ஆனிமாதம் உத்தரம், மார்கழிமாதம் திருவாதிரை இச் சபையில் இருந்து தேரில் எழுந்தருள புறப்படும் மூன்று தினங்களாக தீட்சர்களின் பாதுகாப்பில் அலங்காரம் செய்து, அடியார்களின் அரகர எனும் ஓசையுடன் வீதிஉலா வருவது பக்தர்களுக்கு அருள்மிகு காட்சியாகும்.

தேர் இருப்புக்கு வந்து இராஜசபையாகிய ஆயிரங்கால் மண்டபத்தில் திருத்தாண்டவம் சிறப்புமிகு அபிஷேகத் தரிசனமாகும். சித்திரை, மாசி, ஆவணி, புரட்டாதி சித்சபையில் இருந்து எழுந்தருளி வந்து கனகசபையில் அபிஷேகங்கள் நான்கினையும் தரிசனம் தருவதும் அருள்மிகு பெறுபேறாகும். "ஓம் நமசிவாய"

சித்சபை திருப்பணிகளுக்காக தேவசபையில் ஒரு மண்டலம் தங்கி, பக்தர்களுக்கு தரிசனம் தருகிறார். இது நாற்பத்து எட்டு வருடங்களுக்கு ஒரு தடவை கும்பாபிஷேகம் நிகழும்போது நடைபெறும். அதுவும் தேவசபையில் ஒரு மண்டலம் அருள்மிகு காட்சி தருவார்.

இறைவன் இறைவியுடன் நடனப்போட்டி செய்த இடம் நிருத்தசபை என்று அழைக்கப்படுவது. இது நடராஜர் சந்நிதிக்கு நேர் முன்பு ஊர்த்துவ தாண்டவர் சந்நிதியாக அழைக்கப்படுகிறது.

தமிழகம் முழுவதும் பஞ்சசபை இருந்தாலும், சிதம்பரத்தில் மாத்திரமன்றி பஞ்சசபை கொண்ட எல்லா ஆலயங்களுக்கும் தலைமையாக நடராஜர் என்பதாலும் எம்பெருமான் சபாபதி எனவும் அழைத்து சகல அடியார்களும் ஆசாரசீலராக வணங்குவார்கள். ஓம் நமச்சிவாய.

சிதம்பரம் கோயிலில் நடராஜப் பெருமானை சாபாபதி எனவும், தில்லை சபாநாயகர் எனவும் அழைக்கப்படுவதும் ஓர் அருள்மிகு சிறப்பாகும்.

சித்சபை, கனகசபை இரண்டும் செவ்வக வடிவில் இருக்கும் ஒரே மாதிரியான மண்டபங்கள். சித்சபை, கருவறை என்றாலும் இரண்டுமே கருவறை போன்றது. அதனால் கருவறைக்கு உண்டான இலட்சனைகள் உண்டு. சித்சபையில் அருள்மிகு கற்பக விக்கிரகங்கள் பூசைகள் ஆராதனைகள் தரிசித்தாலும், கனகசபைமீதுதான் "நடராஜர், சிவகாமி, பைரவர், சந்திரசேகரர், நடராஜரின் பிரதியான விக்கிரகங்கள் சந்திரமௌலீசுவரர் எனும் ஸ்படிகலிங்கம், இரத்தினசபாபதி எனும் குட்டி நடராஜர் இரத்தினக்கல் விக்கிரகம் அனைத்து அபிஷேகங்களும் நித்தியபடி தினம் ஆறுகால அருள்மிகு பூசைகள் நடைபெறும். ஓம் நமசிவாய. எம்பெருமான் அருள்மிகு அற்புதக் கூத்தன் ஆனந்தக்கூத்தன் சிவகாமி அம்மா உடனுறை நடராஜா அப்பனுக்கும் வருடத்தில் ஆறு நாட்கள் வெகு சிறப்பாக நடைபெறும் இத்தரிசனம் காண்பவருக்கு முத்தி ஓம் நமசிவாய

சிவகாமி உடனுறை நடராஜர் பூரணமாக அனுக்கிரகம் செய்யும் இடங்கள் சித்சபையும் கனகசபையும் தினம் தினம் அருள்செய்யும் திருத்தல அமர்வுகளையுடைய இடத்தையும் தத்துவார்த்தங்களின் பூரணம் என்பதனை நாம் பயபக்தியாக உணர்ந்து ஆலய ஆகமக் கட்டுப்பாட்டுக்கு ஏதுவாக வழிபடுவோம். முத்தி பெறுவோம். ஓம் நமசிவாய.

*ஆற்றலுடன் பணிவையும் வளர்த்துக்கொள்ளுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜரின் தாண்டவம் உலக இயக்கங்களின் தத்துவம். இதனைக் கண்டு உணர்ந்து கட்டுப்பாடாகவும், கடமையாகவும் தரிசிப்பவர்களுக்கு மானிட வாழ்க்கையின் அடிப்படை அறிவு, உண்டாகவும், பரம்பொருளின் தெளிவு உண்டாகவும், பிறப்பும் இறப்பும் ஆகிய மாய வலையிற் சிக்குண்டாகமல் கையிலாயத்தில் ஆடும் நடனத்தை சிதம்பரத்தில் ஆடிக்காட்டித் திருவருள் புரிந்தார்.

சிதம்பரத்தில் ஆடிய கூத்தை அற்புதக் கூத்தை "யாரறிவாரே" என மானிடம் செழிக்க மாமழை பொழிந்த திருமூலர்.

சிற்பரஞ்சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற் பதமாம் அந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனை பொன் தில்லை கூத்தனை
அற்புதக் கூத்தனை யார் அறிவாரே!

சிதம்பரத்தில் "சிற்பர வியோமம்" எனும் திறந்தவெளி மண்டபத்தில் சித்சபையில் ஆடினார். சித்சபை எனும் மண்டபத்திற்கு கதவுகள், பூட்டுக்கள் நிறைந்து, கனகசபை எனும் பாதுகாப்பு மண்டபம் அமைந்து, பாதுகாப்பு அரணாக உள்ளது.

கனகசபையின் தத்துவம் நமது உணர்வுபூர்வமாக மனதில் நடராஜர் ஆடுகிறார். இதனை மானிடம் செழிக்க மாமழை பொழிந்த மாணிக்கவாசகர், "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தனெனக் கருளியவா றார் பெறுவார் அச்சோவே" என திருவாசகத்தில் பாடினாலும் ஆழ்ந்த மனதில் வரும் மோசமான ஆசை, உலக இயல்பாகிய மலம் எம்பெருமானைத் தரிசிக்கவிடாது. இந்த நிலை கனகசபை என ஆன்றோர் கூறுவர். நமது உடலில் இதயஸ்தானமாக விளங்குவது சிதம்பரம். நேராக இல்லாமல் இடது புறமாக இருப்பது சித்சபை. இதயத்தைப் பாதுகாப்பது, இதயத்தைச் சுற்றி உள்ள தசை. பாதுகாப்பாக இயங்கவைப்பதுபோல, நித்தம் ஆடும் நடராஜாவைக் காக்கும் அரணாக கனகசபை விளங்குவதை நாம் உணர்ந்து இரு சபையாகிய சித்சபை, கனகசபை இவைகளுடன் மற்றைய மூன்று சபைகளாகிய தேவசபை, இராஜசபை, நிருத்தசபை இப்படிப்பட்ட பஞ்சசபை ஒன்றாக கூட ஓர் அமைப்பில் சிதம்பரத்தில் மட்டுமே. ஓம் நமசிவாய. பஞ்சாட்சர மந்திரம் "நமசிவாய" இது எல்லா மந்திரங்களிலும் உயர்ந்தது என ஞானசம்பந்தர் வாக்கு.

தமிழகம் முழுவதும் பஞ்சசபை இருந்தபோதும் சிதம்பரத்தில் மட்டுமே பஞ்ச சபையாகவும் இங்கு தலைவன் நடராஜர் என்பதாலும், சபாபதி என அழைத்து நாம் புனிதம் பேணுவோம். ஓம் நமசிவாய.

மானிடம் செழிக்க மாமழை பொழிந்த
திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயன்மார்களையும்
மாணிக்கவாசக சுவாமிகளையும், திருமந்திர திருமூலரையும்
திருஞான நூல் வேள்வி செய்வோம் திருவடிகளை போற்றி வணங்கி
சைவநெறி தமிழ்நெறி வளர்ப்போம், திருமுறைகளை ஓதுவோம்.
ஓம் நமசிவாய.

*பேராசை வளரத் தொடங்கினால் அறிவாளியும் முட்டாள் ஆவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் – 10

# தியாகத்தின் வகைகளும் மன ஒருமைப்பாடும்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

### 01) தியாகம்

கீதையின் நான்காம் அத்தியாயத்தில் எடுத்து விளக்கப்பெறும் இன்னொரு முக்கியமான கருத்தும் உண்டு. அதுவே தியாகத்தை ஒரு யோகப்பயிற்சியாக மேற்கொள்வதாகும். அந்த யோகத்தைச் செய்யும் பல முறைகளின் விவரங்கள் அங்கு வருணிக்கப்படுகின்றன. கடவுளர்களைப் புகழ்பாடுவது அல்லது தேவர்களைப் புகழ்பாடுவது அல்லது சமயத்திலே காணப்பெறும் தெய்வங்களைப் புகழ்பாடுவது ஒரு தியாகம் ஆகும். அத்துடன் எந்த ஒரு தியாகமும் ஒரு யோகம் ஆகும். ஏனெனில், தியாகம் என்பதன் பொருள் உயர் ஆன்மாவைப் பெறும்பொருட்டு ஒருவர் தன்னை ஓரளவு விட்டுவிடுவது ஆகும். எனவே ஒவ்வொரு வகைத் தியாகத்திலும் உயர் ஆன்மாவைப் பெறுவதற்காக அதற்குக் கீழ்மட்டத்திலுள்ள தன்னையே தியாகம் செய்வதைக் காணலாம். மனம் தன்னைவிட வேறொன்றில் தனது கவனத்தை நிலைநாட்டும் சமயங்களில் அந்த மனம் நினைப்பதைக்காட்டிலும் பரந்த ஒரு தெளிவைப் பெறுகிறது. அச் செய்முறையே தியாகம் என்று கருதப்பெறுகிறது. ஓர் உயர் தத்துவத்துக்காக ஒரு தாழ்ந்த தத்துவம் தியாகம் செய்யப்பட வேண்டும்.

### 02) தியாக வகைகள்

நாம் வழமையாகக் கருதிக்கொள்வதன்படி தெய்வ சிந்தனை சமயத்தின் இலக்காகும். அவ்வாறான தெய்வ சிந்தனையில் ஒருவர் தானே அந்தத் தெய்வத்திடம் சரணடைவது கருதப்பெறுகிறது. இது ஒரு வகைத் தியாகம் ஆகும். எனவே இது ஒரு சமயச் சாதனை ஆகும். அத்துடன் இது ஒரு யோகமும் ஆகும். ஏனெனில் இறைவனைத் தொழுவதன்மூலம் தாழ்ந்தது உயர்ந்ததுடன் ஐக்கியம் அடையச் செய்யப்பெறுகிறது. தாழ்நிலை ஆன்மா உயர்நிலை ஆன்மாவில் சரணடைவது பிரம்ம யக்ஞம் - ஞான யக்ஞம் என்று கருதப்பெறுகிறது.

அறிவைத் தியாகம் செய்வது அல்லது அறிவில் தியாகம் அல்லது அறிவுக்கூடாகத் தியாகம் என்பது உயர் ஆன்மாவோடு ஐக்கியமாவதற்கு மேற்கொள்ளப்பெறுகிறது. உயர் ஆன்மாவோடு ஐக்கியமாவது பிரம்மத்தின் ஒரு வெளிப்பாடாகும்.

புலன்கள் அவை நாடும் பொருள்களில் இருந்து விலக்கப்பெற்று அகமுகமாக நிலைத்து நிற்கும்போது ஒரு தியாகம் செய்யப்பெறுகிறது. அத் தியாகம் யோகசாதனையின் ஒரு பகுதியாகும். ஆசையை அடக்க உதவியாகக் கருதப்பெறும் பொருள்கள்மீது புலன்களின் கவனம் நிலைக்கும்போது ஓர் உயர்ந்த நன்மையின் பொருட்டு ஒருவகைத் தியானம் மேற்கொள்ளப்பெறுகிறது.

*பொய் என்றும் வாழவிடாது. உண்மை என்றும் சாகவிடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம், புத்தி, புலன்கள் என்பவற்றின் ஆற்றல்கள் ஆன்மாவில் மையம் கொள்ளும்போது அல்லது பிரக்ஞை உள்முகம் ஆகும்போது ஒரு தியாகம் செய்யப்பெறுகிறது. அத் தியாகம் ஓர் யோகமாகும்.

மூச்சுப்பயிற்சி என்னும் ரேசகம், பூரகம், கும்பகம் என்பவற்றை ஒழுங்கான முறையில் செய்யும்போது ஒரு தியாகம் செய்யப்பெறுகிறது. அத்துடன் அதுவும் ஒரு யோக வழியே ஆகும். அதன்மூலம் வெளிநோக்கிச் செல்லும் மனமும் புலன்களும் கட்டுப்படுத்தப் பெறுகின்றன. அதனால் தன்னையே தியானிப்பதற்கான ஒருவரின் பூரண பிரக்ஞையும் உபயோகிக்கப் பெறுகிறது. தன்னை என்று இங்கு குறிக்கப்பெறுகிறது ஒருவரது சொந்த ஆன்மாவையும் உள்ளடக்குகின்றது. எனவே ஒருவரின் சொந்த ஆன்மாவைக் காட்டிலும் தான் என்பது பெரிது ஆகையால் அது ஒரு பெரிய தியாகம் ஆகிறது.

நாம் எப்போதெல்லாம் எமது ஆனந்தத்தை வேறொருவரோடு பகிர்ந்துகொள்கிறோமோ அப்போதெல்லாம் நாம் ஒரு தியாகத்தைச் செய்கிறோம். அத்துடன் ஒவ்வொருவரது பெரிய மகிழ்ச்சியும் அகங்காரத்தை தக்கவைத்துக் கொள்வதாகவே இருக்கிறது. திருப்திகள் எல்லாவற்றிலும் பெரியது ஒருவர் தனது அகங்கார உணர்வைப் பேணிப் பாதுகாப்பதே ஆகும். இந்த அகங்காரத்தின திருப்தியினது ஒரு சிறு அளவை நாம் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும்போது அதனுடைய அளவில் அது ஒரு சிறிது குறைகிறது. அதன்மூலம் நாம் எமது ஆளுமையின் ஒரு சிறு அளவைக் கைவிட்டு விடுகிறோம். அதாவது எமது தாழ்ந்த ஆன்மாவில் ஒரு சிறு அளவை மற்றையோருடன் பகிர்ந்துகொள்வதன் மூலம் எமது பிரக்ஞையை விரிவாக்கிக்கொள்ளும் வழியிலே நாம் சிந்திக்கின்றோம். இதே கருத்தை முன்பு தெய்வம் என்ற எண்ணக் கருத்தை ஆராயும்போது விரிவாகச் சிந்தித்தோம்.

இவை யாவும் யக்ஞங்கள் அல்லது தியாகங்கள் அல்லது தவங்கள் ஆகும். எனவே அவை யோகமாகும். ஞான நூல்களைக் கவனத்தோடு கற்பது, ஆன்மாவின் தூய்மை என்பனவும் ஒரு தியாகமாகவே கருதப்பெறுகிறது. ஏனெனில் அங்கே மன ஒருமைப்பாடு இருக்கிறது.

## 03) தியாக உணர்வு

பொருளைக் கொண்டு செய்யப்பெறும் தியாகத்தை மனதால் செய்யும் தியாகத்தைக் காட்டிலும் கீழானதாகவே நாம் எச்சரிக்கப்படுகின்றோம். எனவே பொருள்கள் தியாகத்திற்கு அத்தியாவசியம் ஆனவைஅல்ல. உதாரணமாக ஒரு நன்கொடை உணர்வு மனத்தினது ஒரு செயற்பாடாகும். அவ்வுணர்வு பொருள்களைக் கொடுப்பதைவிட மேலானதாகும். அகரீதியாக அவ்வாறான உணர்வு இல்லாமல் பொருள்களை வழங்குவது தாழ்வானதே. எனவே அது நியாயமாக இருக்கும்பொழுது அவ்வுணர்வையே மேலானதாகக் கொள்ளவேண்டும். கீழ்மட்ட ஆன்மாவை உயர்மட்ட ஆன்மாவுக்கு உயர்த்துவதாக இருக்கும்பொழுது அந்த நன்கொடை உணர்வை மேலானதாகக்கொள்ளவேண்டும். எனவே புலன்களையும் அகங்காரத்தையும் ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தும் தூய்மை என்பது பொருள்களைத் தியாகம் செய்வதிலும்

மேலானது. எனவே மிகப்பெரும் தியாகம் அல்லது மன ஒருமைப்பாடு அல்லது மிக உயர்ந்த யோகம் பிரக்ஞையை அகண்ட பரிமாணத்தில் வைத்திருப்பதாகும். "ஞானத்தை விழித்தெழச் செய்வதன்மூலம் எல்லாச் சந்தேகங்களையும் நீக்கி ஒவ்வொரு செயலையும் யோகமாக மாற்றி உனது உயர்வான பிரக்ஞையில் நிலைகொள்வதே கீதையின் நான்காவது அத்தியாயத்தினது இறுதியான வார்த்தைகள் ஆகும். இக் கருத்தே மேலும் சில விவரங்களோடு கூட கீதையின் ஐந்தாம், ஆறாம் அத்தியாயங்களில் தொடருகின்றது.

## 04) அறிவும் செயலும்

அறிவும் செயலும் வித்தியாசமான இரண்டு விடயங்கள் அன்று. சாங்கியமும் யோகமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றனவே. எனவே ஒருவரது அகங்காரம் போதியஅளவு கைவிடப்படும் வரை எவ்விதமான தியாகமும் சாத்தியமில்லை. நாம் உலகத்தில் இருந்தும், முழுப் பிரபஞ்சத்தின் படைப்பில் இருந்தும் பிரிந்து இருக்கின்றோம் என்றே எப்பொழுதும் உணர்கின்றோம். வெளியே உள்ள ஒவ்வொன்றில் இருந்தும் தன்னைத் தனிமைப்படுத்தும் போக்கு யோகத்திற்கு எதிரானதாகும். ஒருவரது ஆன்மாவை எல்லாவற்றோடும் இணைக்கும் படிப்படியான இயக்கமே யோகம் ஆயின் அது இறுதியில் எல்லாவற்றோடும் இணைவதாகும். எனவே யோகம் இன்றி எவ்வகைத் தியாகமும் சாத்தியம் இல்லை. கீதையின் கருத்தில் தியாகம் என்பது பொருள்களையோ, ஆட்களையோ கைவிடுவதில்லை என்பதோடு பொருள் களின் புறநிலை பற்றிய பிரக்ஞையை விடுவதே முக்கியமானது. எனவே தியாகம் என்பது பிரக்ஞையின் ஒரு தொழிற்பாடாக வருகிறதே அன்றி அது உடம்பின் ஒரு செயற்பாடன்று. எனவே கர்மயோகத்தின் சாரமான தியாகம் மன ஒருமைப்பாடு, தியானம் என்ற வடிவங்களில் இருந்து பிரிக்கப்பட முடியாதது ஆகும். ஏனெனில், மன ஒருமைப்பாடும் தியானமுமே சாதாரணமாக யோகம் என்று அழைக்கப்படுகின்றன. நாம் வரையறுத்துக்கொண்டபடி தியாகத்தையும் செயலையும் கருதினால் அவை இரண்டும் ஒன்றே எனலாம்.

## 05) புலன்களும் ஆசையும்

புலன்கள் பொருள்களின் மத்தியில் இயங்கும்போது ஓர் ஆசையும் இயங்குவதில்லை. நாம் இந்த உலகத்தில் செயல்களைச் செய்யும்போது அதனை நாம் எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு அதனையே பயிற்சிக்குக் கொண்டுவரவேண்டும். பெரும்பாலும் பொருள்களை அறியும்போது அல்லது உணரும்போது அந்த அறிவு அல்லது உணர்வுச் செய்முறையில் ஓர் ஆசை அல்லது நோக்கம் சேர்ந்து கொள்ளுகிறது. நாம் பொருள்களைப் பார்க்கும்போதும் அல்லது ஏதேனும் விடயத்தைக் கேட்கும்போதும் அல்லது ஏதேனும் தொழிலைச் செய்யும் போதும் சுய திருப்தியை நோக்கி அகத்தே ஒருவகையான தூண்டுதல் இருந்துகொண்டுள்ளது. இதனால் ஆசையில்லாத புலன் அறிவை எம்மால் சிந்திக்க முடியாதுள்ளது. எனினும் புலன் நடிவடிக்கைகளை அடக்குவது யோகம் அன்று. ஆனால், அந்த நடவடிக்கைகளை வழமையாகத் தூண்டும் ஆசைகளின் ஈடுபாட்டில் இருந்து புலன் நடவடிக்கைகளை விடுவிப்பதே யோகம்

*உன்னுடைய மனப்பாங்குதான் உன் உயர்வைத் தீர்மானிக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். அகங்கார உணர்வோடு கூடிய சில ஆசைகளினால் எல்லா நடவடிக்கைகளும் தொற்றிக்கொள்கின்றன. ஆசைகள் என அழைக்கப்பெறும் நோய்களில் இருந்து அப்புலன் நடவடிக்கைகளை விலக்குவதன்மூலம் புலன் உறுப்புக்களின் செயல்பாடு அடையப்பெறும் படிப்படியான விடுதலையே யோகமாகும். செயற்பாடு அனுமதிக்கக்கூடியதே. அத்துடன் கீதை செயல்பாட்டை விலக்கமுடியாது என்றே எமக்குக் கூறுகின்றது. அதேவேளை கீதை அச்செயற்பாட்டோடு ஆசையும் இணைந்துகொள்ளாதவாறு நாம் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று எம்மை வற்புறுத்துகின்றது. அதாவது புலன் நடவடிக்கையோடு சமாந்தரமாக ஆசையும் இணைந்துகொள்ளக்கூடாது என்று கீதை எமக்கு வற்புறுத்திக் கூறுகின்றது. செயற்பாடு எப்போதும் ஆசையோடு இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

## 06) ஆசையற்ற செயல்

உண்மையில் மிகவும் உயர்வான செயல் ஆசையற்ற செயலே ஆகும். அத்துடன் ஓர் ஆசையோடு கூடிய செயல் உண்மையில் இறுதியாகக் குற்றம் என்று கூறக்கூடிய ஒன்றே. பொருள்களின் திசையில் புலன்களை ஈர்ப்பது ஒரு பிரபஞ்சச் செயற்பாடு என்று ஒருவர் உணரும்போது (இவ்விடயம் மூன்றாம் அத்தியாயத்தில் விவரமாக விளக்கப்பெற்றுள்ளது.) அவர் பிரபஞ்சத்திலுள்ள பெரும் ஆற்றல்களால் தன்னை இணையச் செய்யும் உயர்நிலையில் அகத்தே மகிழ ஆரம்பிக்கின்றார். செயல்பாட்டின் உண்மையான முகவர்கள் அப் பிரபஞ்சப் பெரும் ஆற்றல்களே ஆகும். எனவே பொருள்களை ஈர்க்கும் புலன்களின் இயக்கத்துக்குப் பின்னால் உள்ள காரணம் அவ்வாற்றல்களே ஆகும். நாம் முன்பு குறிப்பிட்டபடி பொருள்களை நோக்கி அசைவது புலன்கள் அன்று. அந்த நிகழ்வு பிரகிருதியின் குணங்கள். குணங்களின் மத்தியிலேயே அசைவதைக் குறிக்கும். அதாவது பிரகிருதி பிரகிருதியை நோக்கியே அசைகிறது. இயற்கையின் ஆற்றல்கள் இயற்கையின் ஆற்றல்களோடு கலக்கின்றன. அதன் விளைவு யாதெனில், புலன்கருவிகள் என எவையும் இல்லை என்பதும், புலன் பொருள்கள் என எவையும் இல்லை என்பதுமே ஆகும். பிரபஞ்சச் செயற்பாட்டின் பூரண சுற்று இயக்கத்தில் ஆரம்பமும் முடிவுமில்லாத ஒரு தொடர்ச்சியான இயக்கமே உண்டு. அத்துடன் அந்தப் படத்துள் நாம் தனிப்பட்டவர்களாக வருவதில்லை. நம்முடைய இருப்பும் அங்கு இல்லை. அங்கு இருப்பது பிரபஞ்ச ஆற்றலாகும்.

(தொடரும்...

---

மனம் என்னும் பெருவெளி மனிதனிடத்தில் அப்படியேதான் இருக்கிறது. அந்தப் பெருவெளியில் சொர்க்க மாளிகையைக் கட்டுவதா அன்றி நரகக் குழியைத் தோண்டுவதா என்பதை அவன்தான் நிர்ணயிக்க வேண்டும். மரணம் துரத்தும்போது ஆற்றமும் செல்வமும் அடிபட்டுப்போகும். தர்மம் ஒன்றுதான் தாங்கி நிற்கும். தர்மத்தை தாங்கி நிற்பவன் செத்தபின்பும் வாழ்கிறான். தர்ம சிந்தனை அற்றவனோ வாழும்போதே செத்தவனாகிறான். வாழ்க்கை என்பது விலை மிகுந்த ஒரு வாய்ப்பு. ஆனால் அதன் மதிப்போ வாழ்வோரைப் பொறுத்தது.

*தீயை மிச்சம் வைத்தாலும் பகையை மிச்சம் வைக்கலாகாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வர் குருபூஜையால் நெகிழ்ந்தது மன்னார்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

மன்னார் என்றதும் ஞாபகத்தில் முதல் வருவது திருக்கேதீஸ்வரம் ஆகும். அடுத்து எமக்கு மருந்தாவது பாலாவித் தீர்த்தம். தொடர்ந்து நாயன்மார் பாடிய திருப்பதிகங்கள். அவையாவன சம்பந்தர் மற்றும் சுந்தரர் பாடியவை என யாம் விதந்து ஓதிடும் அற்புதமான "விருதுகுன்றமா மேருவின் நாண் அரவா அனல் எரியம்பா" எனத் தொடங்கும் பத்துப் பாடல்களும், "நத்தார் படை ஞானன் பசு" எனத் தொடங்கும் பத்துப் பாடல்களும் ஆகும். இந்த இரண்டு பதிகங்களும் திருக்கேதீஸ்வரத்தில் ஒலித்தவண்ணமுள்ளன. இவை உள்ளடங்கலாகச் சமயக் குரவர்களது பாசுரங்கள் குறையின்றி திருக்கேதீஸ்வரத்தில் தினமும் ஒலிக்கின்றன.

இதனை மேலும் திருவருள் கூட்டும் வகையிலே திருக்கேதீஸ்வரம் அம்மை அப்பன் இல்ல ஸ்தாபகரும் பொறுப்பாளருமான திருமதி சி. வல்லிபுரம் அம்மா அவர்களின் ஏற்பாட்டில் நால்வர் குருபூஜை விழா கடந்த 01.08.2023 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகி வெகு சிறப்பாக நடைபெற்றது. அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், அம்மை அப்பன் இல்ல விசுவாசிகள், அந்தணப் பெருமக்கள், அடியவர்கள், ஆர்வலர்கள், ஓதுவார்கள், பெற்றோர்கள், சிவன் அருள் இல்ல மாணவர்கள், குழந்தைகள், தாய்மார்கள், முதியோர்கள், நகரவாசிகள் எனப் பலரும் கலந்து இவ்விழாவினைத் தெய்வீக சாதனையாகத் திகழச் செய்தனர்.

"கேடிலாத கேதீச்சரம் தொழுதெழக் கெடுமிடர் வினை தானே" இஃது உண்மையல்லவா. வண்டு பண்செய்யும் மா மலர்ப் பொழில் மஞ்ஞை நடமிடும் மாதோட்டம் இது அல்லவா! அடேயப்பா! அம்மை அப்பன் இல்ல வளாகத்தில், ஓர் அழகான கலாசார மண்டபம். நிறைந்த புண்ணிய கைங்கரியங்களுக்காக வல்லிபுரம் அம்மாவால் எழுப்பப் பெற்றுள்ளது. அந்த மண்டபத்தில், மன்னார் வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் திரு எஸ். றமேஸ் அவர்களது தலைமையில், திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கருணானந்தக் குருக்கள் அவர்களதும், அம்மை அப்பன் இல்ல நிறுவுனர் திருமதி சி. வல்லிபுரம் அம்மா அவர்களதும் திருமுன்னிலையில் அவர்களது ஆசிகளோடும், பெறுமதியான வாழ்த்துக்களோடும் வெல்லுமாறு நால்வர் குருபூஜை பெருவிழா முதன்முறையாக இங்கு இதயத்தில் பூத்திருக்குமாறு இனிதாக அரங்கேறியது. அன்னை ஒரு மந்திரம். ஆன்மீக இயந்திரமாய் மன்னாரில் திகழ்கின்றார்.

திருக்கேதீஸ்வர ஆலய ஓதுவார் மூர்த்தி அவர்களது நால்வர் துதியோடு, வரவேற்பு நடனம், வரவேற்புரை, ஆசியுரை, தலைமை உரை, கதாப்பிரசங்கம், பண்ணிசை, குழுநடனம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதாண்டவம், சொற்பொழிவு, சிறப்பு விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரை, நன்றியுரை எனத் தவப்பேறுடன் விழாவானது பூரண திருப்தியுடன் இராப்போசன உபசாரங்களுடன் நிறைவெய்தியது. பிரதம விருந்தினரான மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி அதிபர் திரு பி. பாலபவான் அவர்களும், சிறப்பு விருந்தினராக, மன்னார் கௌரி அம்பாள் தமிழ் மகா வித்தியாலய அதிபர் திரு T. கோகிலராஜா அவர்களும் இவ்விழாவினைத் தத்தமது வாஞ்சைமிகு பேருரையினால் விழாவுக்கு மகுடம் சூட்டினர் எனலாம். சைவப்புலவரும் மன்னார் கௌரி அம்பாள் தமிழ் மகா வித்தியாலய ஆசிரியையுமான செல்வி க. கனகதுர்க்கா அவர்கள் இவ்விழாவின் ஆதார சுருதியாக இருந்து, விழாவினைச் சிறப்பித்து, "பிழையுள்ள பொறுத்திடுவர்" எனும் ஆழ்ந்த சொற்பொழிவொன்றினை ஆற்றி சபையோரைப் பேறாக்கினார். அன்னை வல்லிபுரம் அம்மாவின் தூரநோக்கானது மன்னாருக்கு முதலீடாகும். மாணவ மணிகளது அத்தனை நிகழ்ச்சிகளும் மெய்சிலிர்க்க வைத்தமை சம்பந்தப்பட்ட அனைவரையும் பாராட்டுமாறு உள்ளங்கள் எழுந்தன. சிவதாண்டவ ஆற்றுகைக்கு பதக்கம் சூடி பெருமைகொள்ள முடியும். அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையில் திருமதி நந்தகுமார் நாகபாலினி வெற்றி பெறுகின்றார். திருமுறை ஓதலுடன் விழா நிறை மங்களமானது. அடுத்த விழா எப்போது?

மன்னார் மாவட்டத்தில் அறநெறிப்பாடசாலைகள் பலப்பல இருந்தபோதும், அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உரிய வேதனம் எதுவும் பெறாமல் கடமையாற்றுகின்ற வரத்தையே இறைவன் நல்கியுள்ளான். இது ஒரு கவலைக்கிடமான செய்தியாகும். எமது மண்ணானது அறநெறிப்பாடசாலைகளிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை பிள்ளைகளுக்காக ஆற்றுகின்ற தியாகத்திற்காக சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு ஏதாவதொரு ஊக்குவிப்பை வழங்க ஆவன புரிய வேண்டும். குறிப்பாக அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவைக்கு புலம்பெயர் மக்கள் மாதாந்த ஊதியங்களைச் சீராக வழங்க ஆவனபுரிவார்களாயின் புண்ணியம் கிடைக்காமலா போகும்! தருமம் கட்டிடங்களல்ல. வாழ்வாதாரமே! வட மாகாணம் இன்னும் தவஞ்செய்ய வேண்டியுள்ளது.

---

நமக்கு மன்னன் மகாபலியின் கதை தெரியும். ஆனாலும் ஒவ்வொரு சொல்லையும் சிந்தித்துச் சொல்வதற்கு நாம் பழகவில்லை. மகாபாரதம் நமக்கு தலைகீழ் மனப்பாடம். ஆனாலும் துரியோதனன் அழிவிலிருந்து நாம் அறிந்து தெளிந்து மண்ணாசையை விட்டுவிட எம்மால் முடியவில்லை. பஸ்மாசுரனையும் இராவணனையும் நாம் அறியாதவர்களல்ல. இருந்தும் முறை தவறிய பெண்ணாசையை விட்டொழிக்க முடியவில்லையே. இதிலிருந்து ஒரு உண்மை தெளிவாகின்றது. புராண இதிகாச இலக்கியங்களையும், நீதி நூல்களையும் படிப்பதனால் மட்டும் எந்தப் பயனும் வாழ்வில் வந்துசேரப் போவதில்லை. அதனால்தானோ என்னவோ அறிஞர்களும் மகான்களும் "ஆயிரம் நூல்களைப் படிப்பதைவிட முதலில் நம்மை நாமே படிக்க வேண்டும்" என்று அடிக்கடி கூறியுள்ளார்கள்.

*கண்ணீரின் மொழி அழுத கண்களையுடையவனுக்கு மட்டும்தான் தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைணவமும் சைவமும்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

நிலம் (திணை) சார்ந்து சிறு தெய்வ வழிபாடாக உருவான சமயங்கள் ஐந்தும் சந்திர வம்சமாகவும், நிலம் சாராது சூரிய வழிபாட்டால் உருவான சமயம் சூரிய வம்சமாகவும் ஒரு காலத்தில் இருந்து பின் அவைகள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று கலப்படைந்து நிலம் கடந்து பெரும் தெய்வ வழிபாடாக பரிணாமம் அடைந்தவையே ஆறுவகைச் சமயங்களாகும். இவ்வாறு ஆறு சமயங்களாக பரிணாமமடைந்தபோதும் பேரளவில்தான் அவை ஆறுவகைச் சமயங்களாகப் பதிவானாலும், இந்து மதத்தின் இரண்டு பெரும் பிரிவுகள் என்று சொல்லக் கூடியதாக வைணவ சமயமும் சைவ சமயமும் பெருவளர்ச்சியடைந்தன. குறிப்பாக வட இந்தியர்களில் பெரும்பாண்மையானவர்கள் வைணவ சமயத்தையும் தென்னிந்தியர்கள் மற்றும் இலங்கையில் தமிழர்களும் பெரும்பான்மையாக சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் முக்கியத்துவம் மிக்கவையாகும்.

இவ்வாறு இரண்டு வேறுபட்ட மொழிக் குடும்பங்களும் நிற இனக் குழுமங்களும் வைணவ சமயத்தையும் சைவ சமயத்தையும் பின்பற்றுவதால் மனித முரண்பாடுகள் சமயத்தில் பிரதிபலிப்பதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. காரணம் இது இயற்கையின் இயல்பு ஆனால் புராண இதிகாசங்கள் மற்றும் வேதங்களை சமய சார்பாகப் பார்ப்பது சரியா தவறா என ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வரலாறுகள் என்பது ஒரே நேர்கோடுகள் அல்ல, இடியப்பச் சிக்கல்போல் சிக்கல்கள் நிறைந்தவை. இவைகளை புராண இதிகாசங்கள் மிகவும் நேர்த்தியாகவே ஆவணப்படுத்தியுள்ளது மட்டுமல்ல சமயங்களில் மூல வேர்களையும் இனங்கண்டு ஆவணப்படுத்தியும் உள்ளது. மேலும் சமயங்களின் தனித்துவங்களையும் நடுநிலையாக ஆவணப்படுத்தியும் உள்ளது.

உதாரணம் சிவபுராணத்திலே விஷ்ணு திருமாலாக காட்டப்படுவதுபோல் விஷ்ணு புராணத்தில் சிவன் உருத்திரனாகக் காட்டப்படுகின்றார். எனவே சைவர்களைப் பொறுத்தவரை சிவபெருமானே முழுமுதல் கடவுள். திருமால் பரிவார தெய்வம். வைணவர்களைப் பொறுத்தவரை விஷ்ணு பெருமானே முழுமுதல் கடவுள் ருத்திரன் பரிவாரத் தெய்வம்.

இனி இதிகாசங்களை முக்கியமாக இராமாயணத்தை எடுத்துக்கொண்டால் சீதையை திருமணம் முடிப்பவர் சிவ தனுசை வளைக்க வேண்டும் என்ற நிபந்தனை வைக்கப்படுகிறது. இதற்கு காரணம் சீதையை மணம் முடிப்பவர் சிவனின் அருளைப் பெற்றவராக இருக்கவேண்டும் என்பதே உள்நோக்கம். இராமன் சிவதனுசை வளைத்து பலர் சாட்சியாக சீதையையும் மணம் முடிக்கின்றார். ஆனால் இதைக் கேள்விப்பட்ட பிராமணரான பரசுராமர் இவர் ஏற்கனவே சூரிய வம்ச சத்திரிகர்களுடன் பகைமை கொண்டிருந்தவர் கடும் கோபம் கொண்டு இராமரை எதிர்கொண்டு உன்னால் சிவ தனுசுவை வளைக்கமுடிந்தது உண்மையானால் என்னிடம் உள்ள விஷ்ணு தனுசையும் வளை என போட்டிக்கு அழைக்கின்றார். இராமரும் விஷ்ணு தனுசையும் வளைத்து தனக்கு விஷ்ணுவின் அருளும் உண்டு என்பதை நிருபிக்கின்றார்.

*நம்பிக்கை செழிப்பைத் தராது. ஆனால் தாங்கி நிற்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே பரசுராமரைப் பொறுத்தவரை சிவனும் விஷ்ணுவும் ஒன்று. இராமனே பிறந்தி என்ற கருதுகோளைக் கொண்டிருந்தமைக்கு காரணம் இராமன் சூரிய வம்சத்தை சேர்ந்தவன் என்பதாலாகும். மேலும் இராவணன் இராமனின் விஸ்வரூப தரிசனத்தில் இராமனை சிவனாகவோ, விஷ்ணுவாகவோ அல்லது பிரம்மன் ஆகவோ காணவில்லை. மாறாக அனைத்தையும் கடந்த இறைவனாகவே காண்பதனூடாக இராமாயணம் வைணவ சைவ சமயங்களின் முரண்பாடு அல்ல என்பது புலனாகின்றது.

மேலும் மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்களில் மூத்தவர் சிவபெருமானின் அம்சமான இயமதருமரின் அருளாலேயே பிறந்தவர். மேலும் இந்திரனின் அருளால் பிறந்த அர்ச்சுனனும் சிவபெருமான் அருளாலேயே யுத்தத்தில் வெல்லும் வரங்களைப் பெறுகின்றனர்.

எவ்வாறாயினும் ஸ்ரீ ராமரும் ஸ்ரீ கிருஷ்ணரும் விஷ்ணு பெருமானின் அவதாரங்களாக காட்டப்பட்டமை சைவ வைணவ முரண்பாடுபோல் ஒரு பிரமையை ஏற்படுத்தலாம். ஆனால் ஒரு சமயத்தின் கடவுள் இன்னொரு சமயத்திற்கு தந்தையும் மகனுமாக முடியுமாக இருந்தால், அண்ணனும் தம்பியுமாக முடியுமாக இருந்தால் தாயும் மகளுமாக முடிந்தால் மாமன் மச்சான் ஆக முடிந்தால் ஏன் சூரியக்கடவுளின் சமயத்தைச் சேர்ந்த ஸ்ரீ இராமர் வைணவ சமய கடவுளான விஷ்ணு பெருமானின் அவதாரமாக முடியாது.

மேலும் அவதாரக் கோட்பாடு வைணவ சமயத்துக்கு மட்டுமே உரிய அறிவியல் பரிணாமமாகும். மேலும் இவை அறிவுபூர்வமானதும்கூட, இவை பற்றி தனித்தனி கட்டுரைகளில் பார்க்கப்படும்.

இனி வேதங்களை எடுத்துக்கொண்டால், வேதங்கள் உருவமற்ற இறைவனைப் போற்றுவதாகவே உள்ளது. ஆகமங்கள் புராணங்கள் போலவே அமையப்பெற்றிருப்பதால், புராணங்களை விளங்கிக்கொண்டால் ஆகமங்களைப் புரிந்துகொள்ளலாம்.

## தெளிவுரை

தெய்வம் உண்டென்று இரு, தெய்வம் ஒன்றென்றிரு என்ற முன்னோர்களின் வாக்கிற்கு அமைவாக சைவன் சைவனாக இருப்பதுவே சிறந்த ஆசாரமாகும். அதுபோல் வைணவன் வைணவனாக இருப்பதுவே சிறந்த ஆசாரமாகும். ஆனால் பல தெய்வ வழிபாடுகள் முத்தியின்பத்தை அடைவதில் சிரமங்களை ஏற்படுத்தலாம்.

எவ்வாறாயினும் ஒருவர் சிவதீட்சையை பெற்றிருந்தாலே முறையான சைவனாக முடியும் அல்லது ஒருவர் இறந்துவிட்டால் மரணச்சடங்கில் சிவதீட்சையை வைத்து கிரியை செய்தால் மட்டுமே அவ்வுடம்பு சிவப்பேறை அடைய முடியும்.

---

"இந்த உடல் நமக்கே சொந்தம்" என்று சொல்லிக்கொண்டு நாம் இருக்கின்றோம். நாயும் நரியும் பேயும் கழுகும் தாம் ஒருநாள் இதை உண்ணப்போகிறோம் என்று காத்துக்கொண்டு இருக்கின்றன. அழுகை, அன்பு, சிரிப்பு, வெறுப்பு, விருப்பு எதுவுமே நிலையானதன்று. நாம் சாவு என்னும் வாயிலைக் கடந்த பின்பு இவைகளுக்கு நம்மிடம் உறவு இல்லையே! பிறப்பு, இழப்பு, சாவு இவைகளைத் தடுப்பதற்கு மருந்து எதுவும் இல்லை. அதனால் இடைவேளைகளை அனுபவிக்கக் கற்றுக்கொள்.

*அறிவு தலைக்குக் கிரீடம். அடக்கம் காலுக்குச் செருப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 50000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| பி. அபிசாயி | சுழிபுரம் | 10000. 00 |
| திருமதி ஹ. சந்திரகுமாரி | கனடா | 10000. 00 |
| திரு நேசரத்தினம் குடும்பம் | லண்டன் | 15000. 00 |
| ய. டிவாஸ் | தாவடி | 1000. 00 |
| திருமதி அ. வேலாயுதம் | திருகோணமலை | 1000. 00 |
| திருமதி நிர்மலா புஸ்பநாதன் | தெகிவளை | 10000. 00 |
| க. லிங்கலக்சுமி | திருகோணமலை | 1500. 00 |
| S. குணரட்ணம் | மானிப்பாய் | 1000. 00 |
| இ. சிவகுமார் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| அக்ஷரா அரவிந்தன் | கனடா | 5000. 00 |
| க. பாஸ்கரன் | கனடா | 10000. 00 |
| ஐ. ஷாலினி | உரும்பராய் | 1010. 00 |
| க. ஜெனிதா | கரவெட்டி | 3000. 00 |
| R. நிஷாந்து | கோண்டாவில் | 1000. 00 |
| நி. கிருத்திக் | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| வெ. அரியபூமணி | சாவகச்சேரி | 3000. 00 |
| K. வர்ணவி | இணுவில் | 4மூடை அரிசி |
| சி. கதிரவேலு கெருடாவில் | தொண்டைமானாறு | 2000. 00 |
| ஆதனா, ஆதிகா | கனடா | 100000. 00 |
| துஷியந்தன் இந்திகா, துஷியந்தன் ஜோனவின் | கனடா | 100000. 00 |
| திரு பஞ்சலிங்கம் குடும்பம் | உடுப்பிட்டி | 50000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| ச. அஸ்மிதா | பிரான்ஸ் | 2500. 00 |
| சி. சசிதரன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 2500. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் அத்தியடி | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு ஆனந்தன் | காலி | 2மூடை மா |

*மனிதனுடைய எல்லா வியாதிகளுக்கும் மூலகாரணம் இரத்தமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முருகன் அடியார் | யாழ்ப்பாணம் | 8000. 00 |
| பா. இராஜேந்திரம் G.S. | உடுப்பிட்டி | 3000. 00 |
| திருமதி இ. சந்திரகோபன் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| கெங்காதரன் வதனி | தச்சந்தோப்பு | மரக்கறி, அரிசி, 3000. 00 |
| பொ. குகனேஸ்வரன் | கோண்டாவில் | 3000. 00 |
| பொ. குருபரன் | கோண்டாவில் | 1000. 00 |
| நி. உதயகுமாரி | கோண்டாவில் | 1000. 00 |
| செல்வராசா தேவி | நெல்லியடி | 10000. 00 |
| ஸ்ரீ. ஸ்ரீதேவி | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| ரா. ஜெயலட்சுமி | ஊரிக்காடு | 1000. 00 |
| கு. தக்ஷா | சாவகச்சேரி | 10000. 00 |
| M. லோகேஸ்வரன் | கொழும்பு | 1000. 00 |
| சு. ரதிநிலா | தெல்லிப்பழை | 7500. 00 |
| ஐ. ராமசாமி | இணுவில் | 1000. 00 |
| திருமதி ப. இராஜேஸ்வரன் | கோண்டாவில் | 2000. 00 |
| மு. அப்புலிங்கம் | கோண்டாவில் | 2புட்டி அரிசி |
| திருமதி ஸ்ரீ. விமலேஸ்வரி | சரசாலை | மரக்கறி, அரிசி, 10000. 00 |
| P. பாலமுரளி | அல்வாய் | 10000. 00 |
| கௌ. கிருணிகா | எழுதுமட்டுவாள் | 5000. 00 |
| வே. இரகுநாதன் | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| ப. ஆரூரன் | கல்வியங்காடு | 2000. 00 |
| ஸ்ரீரங்கன் ரெங்கசாமி நினைவாக | அச்சுவேலி மரக்கறி | 1000. 00 |
| ஆ. சாம்பசிவம் | கரணவாய் | 1000. 00 |
| பெ. ராசரெத்தினம் | நவுக்கிரி | 5000. 00 |
| ப. கோபிநாத் | ஆவரங்கால் | 2000. 00 |
| S. தெய்வேந்திரநாதன் | அல்வாய் | 500. 00 |
| வர்ணராமேஸ்வரன் | அளவெட்டி | 1000. 00 |
| குமரசோதி ராதிகா | சுவிஸ் | 1மூடை அரிசி |
| க. வன்னியசிங்கம் | சுவிஸ் | 10000. 00 |
| சொ. பிரபாகரன் | கொழும்பு | 25000. 00 |
| ப. மனோகரன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| அ. முரளிதரன் | கொக்குவில் | 5000. 00 |
| K.V. முனீஸ்வரன் | திருகோணமலை | 1000. 00 |
| திருமதி கு. அன்னலெட்சுமி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| இ. சசிகரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| V. சிவனேசன் | உடுவில் | 500. 00 |
| ஸ்ரீதரன் சரத் நினைவாக | ஜேர்மன் | 10000. 00 |
| க. தனுஷ் | லண்டன் | 10000. 00 |

*ஆசை கண்களைக் குருடாக்குகின்றது. காதை செவிடாக்குகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஸ்ரீ. பகீரதன் நினைவாக | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| யோ. நிசாந்தன் | கொடிகாமம் | 25000. 00 |
| செ. கவிதா | வல்வெட்டி (u.k) | 15000. 00 |
| கோ. பௌசிகா | உடுப்பிட்டி | 1000. 00 |
| S. செல்வநாயகம் | நல்லூர் | 1000. 00 |
| நா. அஞ்சலா | சுவிஸ் | 10000. 00 |
| விஜய நவகிருஷ்ணன், கல்பனா குடும்பம் | குப்பிளான் | 1மூடை அரிசி |
| ஆ. கெங்காதரன் | பருத்தித்துறை | 1000. 00 |
| இ. சௌந்தரம் | நீர்கொழும்பு | 5000. 00 |
| ஞா. சத்தியேந்திரன் | திருநெல்வேலி | தேயிலை, 25kg அரிசி |
| சி. சிவானந்தன் | காங்கேசந்துறை | 10000. 00 |
| வே. குமாரசாமி | காரைநகர் | 1000. 00 |
| திருமதி அன்னலட்சுமி சபாரத்தினம் நினைவாக (கல்யாண சுப்பிரமணியர் ஆலயம்) | சுவிஸ் மரக்கறி வகையில் | 10000. 00 |
| சி. செல்வமணி | பண்டத்தரிப்பு | 10000. 00 |
| மா. குலசேகரம் | கோப்பாய் | 5000. 00 |
| நற்குணம் நினைவாக | கனடா | 10000. 00 |
| பா. தாரணி | குப்பிளான் | 2000. 00 |
| செ. கண்ணதாசன் | சுழிபுரம் | 25000. 00 |
| கே. ஹரீஸ் | ஆவரங்கால் | 2000. 00 |
| சோ. முருகானந்தன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| லோ. லோஜினி | அவுஸ்திரேலியா | 2000. 00 |
| K. சீராளன் | இணுவில் | 5000. 00 |
| S. ஹரிகரன் | அளவெட்டி | 3000. 00 |
| வ. யமுனா | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| செல்வராசா நினைவாக | கரவெட்டி | 5000. 00 |
| ச. நடராஜா | அராலி | 10000. 00 |
| கு. கீர்த்தனா | அச்சுவேலி | 10000. 00 |
| செல்வன் ரியான் | சுவிஸ் | 10000. 00 |
| மங்கையற்கரசி நினைவாக | கைதடி | 10000. 00 |
| ச. கர்ணியன் | ஏழாலை மரக்கறி, 1புட்டி அரிசி | 1500. 00 |
| பு. கஜன் | நெல்லியடி | 5000. 00 |
| ச. பார்த்தீபன் | சிங்கப்பூர் | 23243. 00 |
| க. பிறேம்குமார் | கனடா | 35000. 00 |
| சி. செல்வேந்திரராசா | யாழ்ப்பாணம் | 6500. 00 |
| Dr கனகரெட்ணம் குடும்பம் | கொற்றாவத்தை | 6000. 00 |
| G. கவின்சரன் | மட்டுவில் | 15000. 00 |
| ஜனார்த்தனன் நினைவாக | கொக்குவில் | 5000. 00 |

*தொடக்கத்தைவிட முடிவைப்பற்றி அதிகமாகச் சிந்தனை செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ச. விபூஷணன் | யாழ்ப்பாணம் (அவுஸ்திரேலியா) | 10000. 00 |
| தெல்லிப்பழை பெற்றோல் நிரப்பு நிலையம் | தெல்லிப்பழை | 2000. 00 |
| K. கார்த்திகாயினி | நல்லூர் | 5000. 00 |
| வீ. குணசேகரன் | அச்சுவேலி | 5000. 00 |
| ர. அஸ்மிதா | திருநெல்வேலி | 10000. 00 |
| K. தங்கராஜா | நல்லூர் | 1000. 00 |
| கு. சடகோபன் | ஆவரங்கால் | 12000. 00 |
| R. தனுப்பிரியன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| S. முத்துலிங்கம் | வவுனியா | 10000. 00 |
| இ. மேகநாதன் | கோண்டாவில் | 5000. 00 |
| திருமதி முரளிதரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ரவிமாறன் நிஷாந்தி | ஊரிக்காடு | 2மூடை அரிசி |
| பா. பிரசாத் மூலம் பாலசுப்பிரமணியம் நினைவாக | தெல்லிப்பழை | 10000. 00 |
| M. ஐங்கரன் | மாலிசாந்தி | 15kg அரிசி |
| சுரேஸ் பவானந்தம் | இங்கிலாந்து | 8115. 77 |
| க. கமலழகன் | அல்வாய் வடக்கு | 2மூடை அரிசி |
| திரு மகேந்திரம் | சுவிஸ் | 50000. 00 |
| க.வே. சரவணமுத்து குடும்பத்தினர் | கோண்டாவில் | 10000. 00 |
| க. சுஜின் | மீசாலை | 3000. 00 |
| க. திருநாவுக்கரசு நினைவாக | இமையாணன் | 5000. 00 |
| கு. சுரேக்கா | கோண்டாவில் | 5000. 00 |
| திரு பரமேஸ்வரன் மூலம் சதானந்தன் கஜநிதி | அளவெட்டி (சுவிஸ்) | 50000. 00 |
| வ. கோசலாதேவி | கனடா | 22000. 00 |
| A. வாகீசன் | திக்கம் | 5000. 00 |
| R. ஜெயகரன் | அச்சுவேலி | 1000. 00 |
| திரு தனுஜயன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| அ. குகனேஸ்வரன் | வசாவிளான் | 500. 00 |
| த. கமலினி | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| ம. மயூரன் | திருநெல்வேலி | 5005. 00 |
| திவ்வியா கனகராஜன் | அச்சுவேலி (கனடா) | 200000. 00 |
| ந. மயூரன் குடும்பம் | கொழும்பு | 2000. 00 |
| திரு கந்தசாமி குடும்பம் | சங்கானை | 1000. 00 |
| கி. ஜெயமலர் | பிரான்ஸ் | 20000. 00 |
| பே. தயாளன் | வல்வெட்டி | 1000. 00 |
| கி. சிந்துஜா | கரணவாய் | 5000. 00 |
| பொ. நிஷாந்தி | கரணவாய் | 5000. 00 |
| ஸ்ரீ சாகித்தியா | கரணவாய் | 1000. 00 |

(தொடரும்...

*கசப்பான் சொல் வெறுப்பை வளர்க்கின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபுடதேவ மகாராஜா அவையில் அருணகிரியார் திருப்புகழ் பாட முருகன் ஈசானத் தூணில் கோடிச் சூரியப் பிரகாசத்துடன் அனைவருக்கும் காட்சி கொடுத்தார்

– *செல்வி வல்லிபுரம்* அவர்கள் –

திருவண்ணாமலையில் சம்பந்தாண்டான் என்ற சக்தி உபாசகன் வாழ்ந்து வந்தான். அவன் சமண சமயத்தைச் சேர்ந்தவன். இருந்தும் உமையை வழிபட்டு சில சித்திகள் பெற்றிருந்தான். அவன் மன்னனின் ஆஸ்தான கவிஞனாவான். பிரபுடதேவ மகாராஜா அருணகிரியாரிடம் அதிக மதிப்பை வைத்திருப்பதை பொறுக்கமுடியாத சம்பந்தாண்டான் அரசனிடம் சென்று தான் காளியைப் பூசை செய்து நேரில் அழைத்துக் காட்டுவதாகவும் அதுபோல அருணகிரியார் முருகனை நேரில் அழைத்துக் காட்டட்டும் பார்க்கலாம் என்று அறைகூவினான். அரசனும் அதற்கு இசைந்து அருணகிரியாரை வேண்டினார். தோற்பவர்கள் அந்த நாட்டைவிட்டு வேற்று நாட்டுக்குச் செல்லவேண்டும் என்பதே போட்டியின் விதியாகும்.

முதல்நாட் போட்டியில் சம்பந்தாண்டான் காளியை பிரசன்னமாக காட்டுவதாக பல வேள்விகள் செய்தான். எல்லாம் தெரிந்த பரம்பொருள் முருகன் காளியை (உமையை) ஓரிடமும் செல்லவிடாது பல திருவிளையாடல்கள் புரிந்து மகிழ்வித்து தன்னுடன் வைத்திருந்தார். காளி சம்பந்தாண்டானுக்கு அவையோர் முன்னிலையில் காட்சி கொடுக்கவில்லை. பின்னர் சம்பந்தாண்டானுக்கு மட்டும் காட்சிகொடுத்து உன்னுடைய செயல் தீய நோக்கமுடையது. எனவே உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்ற முடியாது என்று மறுத்துவிட்டாள். எனவே சம்பந்தாண்டான் காளியிடம் நாளை நடைபெற இருக்கும் போட்டியில் முருகனை வரவிடாது பார்த்துக்கொள்ளும்படி உருகி வேண்டினான். காளியும் சம்மதித்தாள். அடுத்தநாள் திருபருணையில் சிவகங்கைக்கு அருகில் உள்ள 16 (பதினாறு) கால் மண்டபத்தில் ஈசான மூலைத் தூணின் முன் இருந்து அருணகிரியார் முருகனை மனம், மொழி, மெய்களால் நினைந்துருகி திருப்புகழ் பாடிக்கொண்டிருந்தார். ஏனையோர்கள் முருகனின் ஒளிக்காட்சியை ஊனக்கண்ணால் பார்த்ததால் கண்ணொளி குன்றிவிடும் என்றும் அதனால் திரையிட்டு திரைக்குப்பின் இருக்கும்படி அருணகிரியார் கேட்டுக்கொண்டார். அரசனும் ஏனையவர்களும் திரையிட்டுப் பின்னால் இருந்தனர். காளி சம்பந்தாண்டானுக்குக் கொடுத்த வாக்கின்படி முருகனை எங்கும் நகரவிடாது தன்மடிமீது வைத்து இறுக அரவணைத்துக் கொண்டாள். பல திருப்புகழ் பாடல்கள் பாடியும் முருகன் பிரசன்னமாகாததால் அருணகிரிப் பெருமான் தனது ஞானக் கண்ணால் முருகன் காளி (உமையிடம்) இருப்பதை அறிந்து உமையைப் போற்றியும் மயிலை நினைந்தும் மனம் உருகி "அதலசேட னாராட அகிலமேரு மீதாட" என்ற திருப்புகழைப் பாடினார்.

*தன்னை அடக்கி ஆளப்பழகினவன் தரணியை அடக்கி ஆள்வான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதல சேடனாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
நதிர வீசி வாதாடும் விடையிலேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட
மதுரவாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வசன மாமியாராட நெடிய மாமனாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்

என்று தொழுதார். மயில் நடனமாடிய அழகைக் கண்டு உமையும் நடனத்தை ரசித்து முருகனின் கைபிடியை இளக்கினார். முருகன் ஓடிச்சென்று மயிலில் ஏறிக்கொண்டார். மயில் முருகனை அருணகிரியாரிடம் சேர்ப்பித்தது. முருகன் ஈசானத் தூணில் கோடிச் சூரியப் பிரகாசத்துடன் காட்சி கொடுத்தார். திரை மறைவில் இருந்த யாவரும் முருகனின் ஒளி வெள்ளத்தைக் கண்டுகளித்தனர். அரசன் முருகன்மீது கொண்ட ஆவலால் திரைக்குள் சென்று பார்த்துவிட்டார். முருகனின் ஒளித் தரிசனத்தை அருணகிரியாருடன் தரிசித்த அரசனது கண்ணொளி குன்றத் தொடங்கியது. தோல்வியை ஒப்புக்கொண்ட சம்பந்தாண்டான் வேறு வழியின்றி வேறு இடம் சென்றான்.

## அருணகிரிநாதர் கிளியுருவாகி கந்தரனுபூதிய பாடிய வரலாறு

திரைக்குள் சென்று முருகனின் ஒளித் தரிசனத்தை தரிசித்த அரசனது கண்ணொளி குன்றத் தொடங்கியது. அரசனது (பிரபுடதேவ மகாராஜா) கண்ணொளி குன்றத் தொடங்கியதை அறிந்த சம்பந்தாண்டான் அருணகிரியாரை பழிவாங்கக் கூடிய தருணமென எண்ணி அரசனிடம் ஆட்களை அனுப்பி பாரிஜாத மலரை விண்ணில் இருந்து எடுப்பித்தால் கண்ணொளி கிடைக்கும். அதனை எடுத்துவர அருணகிரியால் முடியும் என்றும் தெரிவித்தான். அரசன் அருணகிரியாரிடம் வேண்ட அவர் தன்னுடைய உடலைத் திருவண்ணாமலைக் கோபுரத்தில் சேமித்து வைத்துவிட்டு கூடுவிட்டுக் கூடுபாயும் பரகாயப் பிரவேசம் என்னும் மந்திரத்தால் இறந்த கிளியின் உடலுள் தன் உயிரைச் செலுத்தி விண்ணுலகம் சென்று பாரிஜாத மலரைக் கொண்டுவந்தார். பாரிஜாத மலரின் தெய்வீக மணம் அவ்வூரெங்கும் பரவியது. மன்னனின் கண்ணொளி மட்டுமல்லாது ஏற்கனவே கண்ணொளி குறைந்திருந்த யாவருக்கும் கண்ணொளி கிட்டியது. மன்னன் அருணகிரியாரை போற்றித் துதித்தான். அருணகிரியார் கோபுரத்தில் மறைத்து வைத்திருந்த உடலை சம்பந்தாண்டானின் ஆட்கள் எடுத்து புதைத்து விட்டனர். எனவே அவர் கிளி உருவிலேயே அரசனிடம் வந்து தனது நிஜ உருவைக் காட்டினார். பிரபுடதேவ மகாராஜா அருணகிரியாரை புதைத்த இடத்தில் மண்டபம் கட்டி தன் பூச்சக்கரக் குடையை நாட்டினார். பின்னர் அருணகிரிப் பெருமான் தன் நிஜ உருவை எல்லோருக்கும் காட்டி அருள்புரிந்து கிளி உருவில் இருந்துகொண்டே கந்தரனுபூதி என்ற இறை அனுபூதியைப் பாடினார். பெரும் அனுபூதிமானான அருணகிரிப் பெருமான் ஆனி மாதம் பௌர்ணமி கூடிய மூல நட்சத்திரத்தன்று கந்தவேளின் கழலில் கலந்து பேரின்பப் பெருவாழ்வில் அமர்ந்தருளினார்.

*தீயோர் நேசத்தைவிட தனிமை மேலானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகன் ஒருவனையே பாடும் நியமங்கொண்டு பரமபதி விரதநிலையிதுவே என உலகுக்கு உணர்த்திய பரமகுரு நாதரான அருணகிரிநாதர் சிவயோக நெறியில் பெரும் சித்திபெற்றவர். "நாதா" என்று முருகனே அழைக்க அருணகிரிநாதர் எனப் பெற்றவர். நாதமயமாய் நின்று நாதப் பிரம்மமாய் விளங்கியவர். முருகனை மட்டும் துதிப்பவராக இருந்தபோதும் ஏனைய கடவுளர்களையும் தனது திருப்புகழில் வைத்து பாடும் பரந்த நோக்கம் கொண்டவராவர். தமிழ்நாடு மட்டுமன்றி இலங்கையிலும் (ஈழத்திலும்) கதிர்காமம், திருகோணமலை போன்ற ஆலயங்கள்மீதும் திருப்புகழ் பாடியுள்ளார்.

மேலும் கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் என்பவற்றையும் பாடியுள்ளார். அருணகிரிநாத சுவாமிகளை தாயுமானவ சுவாமிகள், சிதம்பரசுவாமிகள், அந்தக்கவிவீரராகவ முதலியார், வரகவி மார்க்க சகாய தேவர், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், கந்தப்ப தேசிகர், இராமலிங்கர், பாம்பன் சுவாமிகள், அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் முதலிய ஆன்றோர்கள் துதிசெய்து அருள் பெற்றார்கள். முருகன் அடியார்கள் அருணகிரிநாதரை வணங்கினால் முருகன் அருள் தானே வரும். யாமும் அவரால் அருளப்பெற்ற பாடல்களைப் பாடி முருகன் கழலைப் பெறுவோம். வாக்கிற்கு ஓர் அருணகிரி என்று நாமும் போற்றித் துதிப்போம்.

## சந்நிதியான் ஆச்சிரமம் தொண்டைமானாறு
## மால் மருகன் சோதரனே மாணிக்க பிள்ளையாரே

தொல்லை தரும் வினையை துரத்தி அடித்திடுவாய்
தும்பிக்கை முகம் படைத்த தூய பரம் பொருளே
எல்லையில்லா நின்புகழை எழுச்சியுடன் போற்றி செய்ய
ஏற்றமிக வரங்கள் யாவும் எமக்களிப்பாய் எப்போதும்
வந்தனைகள் செய்து உன்னை வழிபடும் அடியவரை
தஞ்சமென நீஏற்று தயவுடனே அருள் புரிவாய்
குந்தி எழுவோரின் குறைகளை தீர்த்திடுவாய்
நந்தி மகனாய் வந்த ஞானச்சுடர் விளக்கே
ஓம் எனும் மந்திரத்தின் உட்பொருளும் நீயே
உலகையெல்லாம் உன்வயிற்றில் அடக்கியவனும்
முன்னவனும் முழுமுதலும் மூத்தவனும் நீயே
முக்கண்ணார் பெற்றெடுத்த தத்துவனும் நீயே
குன்றுதோராடி வந்த குமரனுக்கு துணையாக
சந்நிதியில் வந்துதித்து சால்புடனே கோயில்கொண்டு
மாநிலம் முழுவதையும் மகிமையுறச் செய்திடுவாய்
மால் மருகன் சோதரனே மாணிக்கப் பிள்ளையாரே.

-முருகுப்பிள்ளை செல்லத்தம்பி-

*வாழ்வும் தாழ்வும் ஒருவழி நில்லாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண் கவியரசிகள்

(தொடர்ச்சி...

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## 07) மதம் அழியாமல் காத்த மங்கையர்க்கரசியார்

செந்தமிழ்ப் புலமைச் செல்வியாள் எனத்தகும் சிறப்பு வாய்ந்த மங்கையர்கரசியாரின் மாண்பினைத் தமிழுலகம் நன்கு அறியும். அஞ்சா நெஞ்சும், நீதி வழுவா நேர்மையும் தலை சிறந்த சமயப்பற்றும், களங்கமற்ற தூய உள்ளமும், நூல் ஆராய்ச்சித் திறனும் உடைய சோழன் குலக் கொழுந்தாகிய அந்த மங்கை நல்லாளின் அருஞ் செயலன்றோ தமிழ்நாட்டில் சைவசமயம் அழிந்துபடாமல் அந்நாளில் காத்தது.

தமிழ்நாட்டில் சைவம், வைணவம் என்னும் இரு பெருஞ் சமயங்களே முன்னாளில் பெரும்பான்மையோரால் கைக்கொள்ளப்பட்டுவந்த சமயங்கள். பின்னர் சமண சமயம் மெல்லத் தலைகாட்டத் தொடங்கியதனால் மக்கள் சமணம் சாரப் புறப்பட்டுவிட்டனர். சமணத் துறவிகள் பள்ளிகளையும் பாழிகளையும் ஆங்காங்கு அமைத்துக்கொண்டு, தங்கள் சமயத்தைப் பரப்புவதில் முனைந்து நின்றனர். அவர்கள் முயற்சி பயன்தராமற் போகவில்லை. அச்சமயத்தில் புகுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்தது.

பாண்டிய நாட்டை ஆண்டு வந்த மாறபாண்டியன் சமண முனிவர் போதனையின் உணர்ச்சியால் ஆட்கொள்ளப்பட்டான். நன்மை தீமைகளை ஆராய்ந்து உணரும் பகுத்தறிவின் ஒளி மங்கியது. சமண சமயத்தை தழுவினான். வைதிக சமயமாகிய சைவ சமயத்தைத் துறந்தான்.

மன்னவன் நெறி தவறிச் செல்லின், அங்ஙனம் செல்லவிடாது தடுத்துச் செந் நெறிப்படுத்துதல் அமைச்சர் முதலானோர் கடமை. “அவ்வாறு இடித்து உரைப்பாரைப் பெற்றிராத அரசன், “பாகன் இல்லாத யானைபோல்” நெறியல்லா நெறி சென்று தானே கெடுவான்” என்பது மறைமொழி. வேந்தன் வெகுண்டு ஒறுப்பினும் பின்னிடாது தம் கடமையில் ஊன்றி நிற்கும் மனத்திட்பம் உடையோரே அவ்வாறு செய்ய வல்லவராவர். ஆனால், இக் கடமை உணர்ச்சி எல்லோரிடத்தும் எதிர்பார்க்கக்கூடியது அன்று. தற்காலத் தியாகிகளிடத்தில் மட்டுமே இது காணப்படும். அங்ஙனமின்றி, பிறர் நலம் கருதாது தன்னல நோக்குடையோர் மன்னவன் மனம் மகிழுமாறு இச்சகம் பேசி தம் பயன்பெறவே விழைவதன்றி அவன் கோபப்படும் பாத்திரராகச் சிறிதும் துணியார். ஆதலின் பாண்டியனைச் சூழ்ந்துள்ள தன்னல நாட்டம் கொண்டு அரசியல் ஆதாயம் பெறுவதற்கு எண்ணுபவர் மன்னனை மகிழ்வித்தலையே நோக்கமாகக் கொண்டு அவனைப் பின்பற்றிச் சமண சமயத்தில் சேர்ந்தனர். இனி ஏனைய குடிமக்களைப் பற்றிக் கூறுவானேன்!

பாண்டி நாட்டில் தனிச் செங்கோல் ஓச்சிவந்த சைவ சமயம் பறந்தோடியது. சமண சமயமே எங்கும் பரந்து நின்றது. இந்நிலையில், “கொற்றவன் சீற்றத்தால் யாது விளையினும் விளைக!” என அன்பு நெறி நின்று எதிர்த்துப் பொருது பாண்டிய நாட்டையும் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலனையும் உய்விக்கத் துணிவுகொண்டு நின்ற வீரப் பெருமக்கள் பங்கயச் செல்வியாம் மங்கையர்க்கரசியும் அவருக்குத் துணை செய்யும் புணையெனக் கொண்ட அமைச்சர் குலச்சிறையாருமே ஆவர்.

"கணவன் சொல் கடவாமல் ஒழுகுதலே கற்புடைய மாதர் கடமை; ஆடவர் ஆணையை மறுப்பது அரிவையர்க்கு அடுக்குமோ?" என்று எண்ணி வாளா இருந்தனரோ மங்கையர்க்கரசியார்? இல்லை! இல்லை அவ்வாறு இருப்பது அவர் தம் கடமையினின்றும் தவறியதாகுமே. அவ்வழிச் செல்லும் ஆடவரை அறவுரையாள் நல்வழிப்படுத்தும் பெரும் பொறுப்பைப் பெண்டிர்க்கே உரியதாக்கி மகிழ்ந்த இந்த நாட்டில், அங்ஙனம் வாளாதிருப்பதற்கு மகளிர் அடிமை வாழ்க்கையினர் அல்லரே.

"அரசர் பெருமானே! தாங்கள் செய்யத் துணிந்தது தக்கதோர் செயலன்றே. அறிவுடையோர் வெறுக்கும் இக் காரியத்திற்கு தங்கள் உள்ளம் இசைந்ததும் வியப்பே. வேண்டா! கல்வியிலும் அறிவிலும், சமய ஆராய்ச்சியிலும் வல்லுநராகிய நம் முன்னோர்களை அவமதிப்பதாகிய இக் காரியத்தைக் கைக்கொள்ளாமல் இருக்குமாறு தங்களைப் பணிவுடன் வேண்டுகின்றேன். எனது வேண்டுகோளைப் புறக்கணிப்பது என் மனதைப் பெரிதும் புண்படுத்துவதாகும். வாழையடி வாழையாக வழங்கிவரும் ஒப்பற்ற நமது சமயத்தில் நீங்கள் கண்ட குறைபாடு யாது? எவ் எவற்றால் சமண சமயம் ஏற்றமுடையதெனக் கொண்டீர்கள்?" (சமயம் மாற நினைக்கும் நம்மவர்கள் இத்தகைய வினாக்களை தம் மனதில் உருவாக்கி விடை காணுங்கள்.)

சமண சமயத்தில் புகாதபடி தடுக்கப் பாண்டிமா தேவியார் மொழிந்த இம் மாற்றங்களால் மாற வழுதி சிறிதும் மனம் மாறப்பெற்றான் இல்லை. அதனால் மாதரசியாரின் உள்ளம் வெதும்பியது. கண்களில் நீர் பெருகியது. என் செய்வார், பாவம்! "அந்தோ! அறியாமையால் அரசன் இழைத்த இத் தவறு நாட்டையே பாழ்படுத்துமே! மாசற்ற பாண்டிய குலம் பழிக்குள்ளாக நேர்ந்ததே! எம்பெருமானே! நீதான் எமது அரசரையும் நாட்டையும் காத்தருளவேண்டும்" என ஆலவாய் அமர்ந்த அவிர்சடை அண்ணலை வேண்டினாள். பின்னரும் அவர் பார்த்திபனை நோக்கி, "வெற்றிவேல் கொற்றவ! தங்கள் விருப்பம் இதுவாயின் அடியாள் செய்யத் தகுவது யாது? எனினும், எனது வேண்டுகோளுக்கும் சிறிது செவிசாய்த்தருளுக. நமது சமயத்தின்பால் எனக்கு உளதாகிய பற்று என்றும் என்னை விட்டு விலகுவதன்று. சமண சமயமோ என் உள்ளத்தில் இடம்பெறாது. ஆதலின், யான் பெரிதும் விரும்பிப் போற்றும் சைவ சமயத்தையே கைக்கொண்டு ஒழுக அன்போடு என்னை அனுமதியுங்கள். நெறிமுறை பிறழும் செயலில் ஈடுபடுமாறு என்னை வற்புறுத்த வேண்டா. தங்கள் கருத்தோடு மாறுபாடு கொள்ள நேர்ந்தமைக்கு உண்மையாகவே வருந்தும் என்னை மன்னிப்பீராக" எனக் கூறிச் சென்றார். கருத்து வேறுபாட்டின் காரணமாக அவ்விருவரும் ஒருவர் மாட்டொருவர் வெறுப்போ பகைமையோ கொண்டிலர்.

ஒன்றோடு ஒன்று ஒவ்வா இருவேறு வகைப்பட்ட சமய நெறிகள் அரசன் அரசியரது இன்ப அன்பு வாழ்விற்கு இடையூறு விளைவிக்கவில்லை. மற்றெல்லா வகையாலும் கருத்து ஒருமித்து அவர்களின் காதல் வாழ்க்கைத் தோணி இனிது நீந்திய வண்ணம் இருந்தது. எனினும் செந்தமிழ் நாட்டின் அவலநிலை பாண்டிமாதேவியின் உள்ளத்தை மிக்க கவலைக்குள்

*வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளை நிதானத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்த்தியது. நாட்டிற்கு நேர்ந்த சிறுமையைத் தீர்க்கும் நெறிகளைக் காண அவர் பெரிதும் விரும்பினார். தாம் மேற்கொண்ட தொண்டில் பங்குகொள்ளுமாறு அமைச்சர் குலச்சிறையாரையும் தூண்டினார்.

சில நாட்களுக்குப் பின்னர் சிவனடியார் சிலர் வாயிலாகத் திருஞானசம்பந்தரின் பெருமை குலச்சிறையாருக்கு எட்டியது. ஓதற்கரிய உயர் ஞானச் செல்வராகிய சம்பந்தப் பெருமான் என்னும் கதிரவன் தோன்றின் சமண சமயமாகிய காரிருள் தொலையும் என்று எண்ணினார் அவர். அரசியாருக்கும் தம் கருத்தைக் கூறினார். அந் நற் செய்தியைக் கேட்ட அரசியார், கண் பெற்ற குருடன்போலக் களிப்பு மிகப்பெற்றவராய் அப்பெருமானை எவ்வாறேனும் அழைத்து வருமாறு அமைச்சரை வேண்டிக்கொண்டார். அவரும் அதற்கு இசைந்து அப்பெருமான் எங்கு உள்ளார் என வினவி, திருமறைக்காட்டில் இருப்பதாக அறிந்தார். சமணர்களால் நாட்டிற்கு உண்டான தீங்கினைக் குறிப்பிட்டு, அதனைப் போக்க இங்கு எழுந்தருள வேண்டும் என விண்ணப்பத் திருமுகம் ஒன்று வரைந்தார்.

திருமுகம் கண்ட சீகாழிப் பிள்ளையார் அடியார்கள் புடைசூழ எழுந்தருளி மதுரையம் பதியை அடைந்தார். சிவஞானச்செல்வரின் வருகையை அறிந்த அமைச்சர் விரைந்தோடிச் சென்று சேவடி பணிந்து நல்வரவு கூறி வரவேற்றார். கோப்பெருந்தேவியும் அங்கு வந்து, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான வேந்தரைக் கண்குளிரக் கண்டார். பக்திவெள்ளம் பெருக்கெடுப்பதுபோல் கண்கள் நீர் பெருக்க, இருகை கூப்பி இறைஞ்சி, ஒரு புறம் ஒதுங்கி நின்றார். செந்தாமரைச் செல்வி போன்ற பாண்டிமாதேவியாரின் சிவபக்திப் பொலிவும் அவரது தொண்டின் சிறப்பும் கண்ட சம்பந்தர் வியப்புற்று,

"மங்கையர் கரசி! வளவர்கோன் பாவை
வரிவளைக் கைமட மானி!
பங்கையச் செல்வி! பாண்டிமாதேவி!"

என உளம் கனிந்த அன்புடன் வாயாரப் புகழ்ந்தார். அமைச்சர் அமைத்திருந்த விடுதியில் அடியவர் குழாத்துடன் சென்று தங்கினார்.

சம்பந்தரின் ஆற்றலை அழிப்பதற்கு சமணர்கள் அவர் தங்கியிருந்த விடுதிக்குத் தீயிட்டனர். அதை அறிந்த சம்பந்தர் இத் தீயின் வெப்பம் பாண்டியனைச் சேரட்டும் என்று கூறியதும், திடீர் என வேந்தனை வெப்புநோய் தோன்றி வெதுப்பலாயிற்று. நோயின் கொடுமையைத் தாங்கமுடியாமல் தவித்தான் பாண்டியன். அலறினான்; புரண்டான்; கூவினான். அரண்மனையில் உள்ளார் அனைவரும் அங்கு திரண்டனர். அரசியாரும் அரசனை அணுகினார். அமைச்சரும் ஓடினார். சமண முனிவர்கள் அரசன்பால் சென்று கூடினர். "அரசர் பெருமானே! அஞ்சற்க, கொடிய இப் பிணியை நொடியிலே ஒழிப்போம்" எனத் தேற்றினர். மயிற்பீலிகொண்டு அவனது உடலைத் தடவினர். மந்திரம் ஓதினர்; கற்ற வித்தையெல்லாம் காட்டினர். என்ன செய்தும் என்ன? நோய் மிகுந்ததேயன்றித் தணியவில்லை. நோயின் வெம்மையால் வெதும்பும் வேந்தன் சமணர்பால் வெறுப்பும் சீற்றமும் கொண்டான். "எனது நோயைப் போக்கும் ஆற்றல் நீவிர் பெற்றிலிர்; விலகிச் செல்லுங்கள்" என வெகுண்டான். அந்நிலையில் அரசியார் சிவனடியாராகிய திருஞானசம்பந்தர் மகிமையை எடுத்தியம்பி, "அவரே இப் பிணியைப் போக்கவல்லார்" எனவும் கூறினார். "அவரை அழையுங்கள் அவரை அழையுங்கள்" என

*திருப்தியைப் போன்ற பொக்கிஷம் வேறெதுவும் கிடையாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்தோடு கூவினான் பாண்டியன். உடனே, குலச்சிறையார் விரைந்து ஓடி, சம்பந்தரை அரசனிடம் அழைத்து வந்தார். அப் பெரியாரது திருநோக்குப்பட்ட அளவில் வெப்பு நோயின் தாக்கம் தணிவதாயிற்று. ஆண்டவன் அருள்பெற்ற அடியார்களின் பெருமை அளவிடற் கரியதன்றோ! மன்னனின் உடல் குளிர உள்ளம் குளிர்ந்தது. முகம் மலர்ந்தது; கைகளைக் கூப்பி ஞான வள்ளலை இறைஞ்சினான். அதுகண்டு தாங்காத சமணர்கள் இச் சிறுவனை வாதினால் வெல்லுவோம் என ஆர்ப்பரித்து எழுந்தனர். வாதம் பல செய்தனர். அனைத்திலும் தோல்வியுற்றனர். சம்பந்தரே வெற்றி கண்டார். சமணர்கள் நாணித் தலை வணங்கப் பெற்றனர். அரசனும் அவர்களைப் புறக்கணித்தான். அதனால் அவர்கள் மதியிழந்து வாழ்விழந்து திசை தெரியாது ஓடி ஒளித்தனர்.

"அண்ணல்! அடியேன் அறியாமையால் இழைத்த பிழையை பொறுத்து அருள்புரிக!" என வேண்டினான் வேந்தன். சம்பந்தர் திருநீறு அளிக்க, பாண்டியன் அதை வணங்கி வாங்கி நெற்றியில் அணிந்து சைவசமயச் சார்பினன் ஆயினான். பாண்டியநாடு சமண இருள் அகல, சைவஒளி பரவி முன்னர்போல் பொலிவுற்று விளங்கியது.

புரட்சிகரமான வீரச்செயலால் தமிழ்நாட்டிற்கு நேர்ந்த தீமையை விலக்கிக் காத்த மங்கையர்க்கரசியாரின் கீர்த்தி எங்கும் பரவியது. "தமிழ்நாட்டைக் காத்த தாய்" எனவும், "சைவசமயம் தழைக்கச் செய்த தெய்வம்" எனவும் எல்லோரும் அவரை மனமார, வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினர்.

முதுகு சிறிது வளைந்திருந்தமையால் கூன்பாண்டியன் என்று அழைக்கப்பெற்ற மாறபாண்டியன் திருஞானசம்பந்தரின் திருவருளால் கூன் ஒழிந்து "நின்றசீர் நெடுமாறன்" ஆயினான். எங்கும் சைவம் தழைக்கவும், திருநீற்றின் ஒளி விளங்கவும் சிவபக்தியில் சிறந்த அமைச்சர் குலச்சிறையாரின் துணையால் நாட்டை நல்ல முறையில் பாதுகாத்து வந்தான்.

மங்கையர்கரசியாரின் இந்த வரலாறு, முற்காலத்தில் தமிழ்நாட்டுப் பெண்டிர் கல்வியிற் சிறந்தவர்களாய், வீரம், உரிமை, சுதந்திரம் முதலிய பண்பாடுகளுடன், சீரிய வாழ்க்கை பெற்றிருந்தனர் என்பதைப் புலப்படுத்துவதாக உள்ளது அல்லவா! அன்றியும், அவர்கள் தெய்வமாகப் போற்றப்பட்டு வந்தனர் என்பதையும் இவ்வரலாறு உணர்த்துகின்றது. திருத்தொண்டர் புராணம் இயற்றிய தெய்வப்புலவராகிய சேக்கிழார், அவ்வரசியாரை அன்புவெள்ளம் கரைபுரண்டோட உள்ளமுருகி, "எங்கள் தெய்வம்" எனப் பாடிப் பரவியிருப்பதைப் பாருங்கள்.

"மங்கையர்க்குத் தனிஅரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து, வளைக்கைமானி
செங்கமலத் திருமடந்தை, கன்னி நாடாள்
தென்னர் குலம் பழிதீர்த்த தெய்வப்பாவை
எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே
இருந்தமிழ்நாடு உற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்றல் ஆமே!"

(தொடரும்...

*வாய்ப்பு ஏற்படும்போது நல்லது செய்துவிடுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் செல்வச்சந்நிதியின் செல்லக் கந்தன்

– ஜெ. மதுமதி அவர்கள் –

உலகில் ஆடும் தொட்டிலெல்லாம் உன் பெயர் பாடும் - முருகா
உண்மை பேசும் மொழிகளெல்லாம் உன் புகழ் பேசும்!
உன் முகமலரின் அழகில் மட்டும் முதுமை வராது! அழகா
உன் முகம் காணும் அருள் தானே பேரருள் ஆகும்!

முருகன் என்றால் அழகன் என்று தமிழ்மொழி கூறும் - கந்தா
அழகன் எந்தன் குமரன் என்று மனமொழி கூறும்!
வேலுண்டு வினையில்லை வேல் முருகா - உந்தன்
வேல் கொண்டு வினைகளெல்லாம் அழித்திடுவாயே.

அன்பின் வடிவாகி, அழகின் சொருபமாய் - அகிலத்தின்
அச்சம் தனை அகற்றிடும் அருளே வடிவானவனாய்!
அடியவர் துயர் தீர்த்திடும் அருள் கடலே! - என்
அழகுச் செல்வச் சந்நிதியின் செல்லக் கந்தனே!

கற்பூர ஒளியே, கருணையே உருவாகி - உந்தன்
பொற்பாதம் நான் கண்டிட்டால் பேரருள் அடைவேன்!
கடம்பன் என்ற பெயர் பெற்றே கரை காட்டிடுவாயே! - இங்கே நீயும்
கறைகளெல்லாம் கரைத்திடவே அருள் செய்திடுவாயே!

சந்தம் கொண்டு பாடவா, செந்தமிழால் அபிஷேகம்!
சந்தங்களும் போதாது ஐயா, உந்தன் புகழ் பாடிட!
வேல் முருகா ஓடிவா! மால் மருகா ஓடிவா!
வல்துயர் தீர்த்திடவே! வலிமையை அளித்திடவே!

ஒளி தரும் ஓங்காரனே! அழிதுயில் மாதவனே!
ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் பொருளோனே!
வெற்றி வேலுடன், சேவற் கொடியாட - அழகு
மாமயில் மீதேறி, பவனி வாரும் ஐயா!

நித்திய அன்னதானக் கந்தா உம் பாதம்
நித்தமும் தொழுவார்க்கு ஒரு துயரும் இல்லையப்பா!
வேல் கொடுத்த தைரியமோ வேறெங்கும் கிடைத்ததில்லை!
வாழ்நாள் முழுவதுமாய் வாழ்த்திடுவேன் உம் புகழை!

*தன்னை வெல்லமுடிந்தவனே மிகப்பெரிய வீரன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

**01.09.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "அருணகிரிநாதரும் திருப்புகழும்"

வழங்குபவர் :- திருமதி தில்லைமணி சண்முகவடிவு அவர்கள்

[சைவப்புலவர்]

---

**08.09.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "வாழ்வாங்கு வாழுதல்"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

[இளை. அதிபர்]

---

**15.09.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "முருகன் அருளாட்சி"

வழங்குபவர் :- திரு அ. அமுதாஸ் அவர்கள்

[தபால் திணைக்களப் பணியாளர்]

---

**22.09.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "மகாபாரதம்" **(தொடர்)**

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**29.09.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் புரட்டாதி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சிவ. ஆறுமுகசாமி J.P. அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

[ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி]

309 ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DOP/NEWS/103/2023

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org